அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு

19-5-61] :-: [விலை 16 காசு

மேயர் திரும்பி வந்தது ஏன்? தெரியுமா!

தோழர் சம்பத்துக்கு அடுத்த படியாக புதுக்கட்சியில் கருதப்பட்டவர் மேயர் முனுசாமி. அவரே, அக்கட்சியை விட்டு திரும்பிவந்து விட்டார் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு! களிப்புக்குரிய நிகழ்ச்சியெனக் கருதுகின்றனர், கழகத் தோழர்கள். 'அரசியல் மேதாவி'யான அன்பர் சம்பத்தோ, வழக்கம்போல் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு பேசுகிறார், "இது நான் எதிர்பார்த்த ஒன்றுதான்" என்று. இப்படிநடக்கும் என்று எதிர்பார்த்தாராம்! இப்படி இன்னும் எத்தனை பேர்களைப் பற்றி, 'அவர்' எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாரோ!!

மேயர் முனுசாமி, கழகத்தில் சேர்ந்தநாள், இன்னும் எனக்கு நன்கு கவனமிருக்கிறது. அப்போது சம்பத், கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். நான் பெரியாரின் "விடுதலை" யில் துணை ஆசிரியராக இருந்தேன். சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக, மிகச் செல்வாக்கோடுயிருந்த கத்தே ரங்கையா என்பவரை ஒரு தோழர் வீழ்த்திவிட்டார், அவர் பெயர் முனுசாமி என்று நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். ஒரு ஒல்லியான உருவம் வந்தது! தான்யாரென்பதை அறிமுகப்படுத்திக் கொண்டது, 'விடுதலை'ப் பணிமனையில். அவர்தான் முனுசாமி! அந்த நாள் முதற்கொண்டு, எனக்கு அவரை நன்றாகத் தெரியும். கொள்கையின் மாட்டு நல்ல பற்றுக்கொண்டவர்! எந்த தியாகத்தையும் ஏற்க தயங்காதவர். ஆச்சாரியார் கவர்னர் ஜனரலாக வந்தபோது, கழகம் கருப்புக் கொடி காட்டிய வேளையில், போலீசாரால் 'நன்கு' தாக்கப்பட்டு, அவர்காயமடைந்ததையும், அப்போதும் அவர் தங்கசாலைத் தெருவிலிருந்த கழகப் பணிமனைக்கு வந்து ஆர்வத்தோடு தோழர்களுக்கு ஆறுதல் வழங்கியதையும் மறக்க முடியாது.

கழகம் ஆரம்பித்த நாள் முதல், பல நிகழ்ச்சிகளிலும், குழுக்களிலும் பங்கு கொண்டு பணியாற்றியவர் என்பதோடு, என்னைப்போன்றவர்களிடம் குடும்ப உறவினர் போல் எப்போதும் பழகுகின்றவர். "இவர் கூடவா தேசீயக் சட்சிக்குப் போய் விட்டார்?" என்று எண்ணி, நான், வேதனையடைந்ததுண்டு. ஏனெனில், சம்பத்துயார், எப்படிப்பட்ட நபர் அவர், என்றாவது தொண்டர்களை சம்பத்துமதித்ததுண்டா, என்பதில் எங்களைப் போன்றோரின் கருத்தே முனுசாமிக்கும் உண்டு.

அவரா, சென்றார்?—என்று நாங்கள் ஆச்சரியமடைந்தோம்! அண்ணா மட்டும், "முனுசாமி என்ன! பலர், ஏதோ ஒரு எண்ணத்தில் போயிருக்கிறார்கள். பழைய சம்பத், இப்போது இல்லை. சம்பத்தின் கொள்கைகள், பரிதாபப்படும்படியான அளவில், மாறிக் கொண்டு வருகின்றன. இதைப் பார்த்தால், கொள்கைக்காக வாழும் தோழர்கள், நம் குடும்பத்துக்கு வந்து விடுவார்கள்" என்றார். அவருடைய யூகம் பலித்து விட்டது! அன்பர் முனுசாமி, "சென்ற இடத்தின் நிலையை" தெளிவாகத் தெரிந்து கொண்டு திரும்பி விட்டார்!!

இருந்த கொள்கைக்கு முழுக்குப் போடுவது — இத்தனை நாளும் பேசி வந்த பொதுவுடைமைக் கோட்பாட்டை விட்டு முதலாளித்துவப்பாதைக்கு முட்டுக்கொடுப்பது—ஏக இந்தியா என்று பேசுவது—என்றால், சாதாரணமான காரியமல்ல!

சம்பத், இவையத்தனையையும், படபடவென்று கொட்டித் தன் சுயரூபத்தை "ஒரு கட்சி" உருவிலே உருவாக்கியிருக்கிறார்!! கொள்கை பிடிக்கவில்லை என்று போவது, அரசியலிலே குற்றமில்லை—அப்படிச் செல்வோர், பழையகொள்கையை விடத்தீவிரமான கொள்கையையேத் தேர்ந்தெடுப்பர்—பணிபுரிவர். சம்பத், பூஞ்சோலை வேண்டாம் எனச் சொல்லிவிட்டு, சாக்கடையிலே கைவைக்கிறார்! திராவிடம் வேண்டாமென்று கூறி விட்டு, ஏக இந்தியாவுக்கு மன ஒப்புதல் அளிக்கிறார்—எந்த 'இசமும்' தேவையில்லை என்று ஊரறியச் சொல்லி விட்டு, வடநாட்டு முதலாளிகள் இங்கே வரலாம் என்கிறார்!! இதனை, முனுசாமி போன்றோர் எப்படி ஒப்பமுடியும்? அவர்கள் என்ன ஐந்தாறு அடுக்கு மாடி வீட்டில், நல்ல சூழ்நிலையிலே பிறந்து, பிறந்த இடத்தின் பெருமையால் தலைவராக வந்தவர்களா! கிடையாதே! மேயர் முனுசாமியால், எப்படி முதலாளித்துவத்துக்குச் சாமரம் வீச முடியும்?

சம்பத்தால் முடியும்! ஏனெனில், அவருடைய உள்ளமே, பூர்ஷ்வா மனோபாவம் கொண்டது! அவருக்கு ஏழைத் தொண்டனைக் கண்டால் பிடிக்காது — சினிமாவுக்கு 'டிக்கட்' வாங்கிக் கொடுக்கும் நண்பர்களைத்தான் பிடிக்கும்—கம்யூனிஸ்டு இராமமூர்த்தியைப் பிடிக்காது—காங்கிரஸ் தலைவர்களைப் பிடிக்கும்—கழகக் கூட்டத்துக்கு வர, நாடு முழுதும் இலவசமாக இரயிலில் போக எம்பிக்களுக்கு வசதி உண்டென்றாலும் 50,100 என்று பணம் கேட்பார்- பணம் அனுப்பினாலும், உடன் ஒப்புதல் கிடைக்காது—இப்படிப்பட்ட "ஒழுக்க சீலர்" "நாணயஸ்தர்" எப்படி ஏழை பங்காளராக விளங்கமுடியும்? ஏழைபங்காளராக வேடம் போட இப்போது அவர் முயற்சிப்பதாகச் சொல்கிறார்கள்! அந்த 'முயற்சி'யைக் கூடச்சரியாகச் செய்ய முடியாத காரணத்தாலேயே, வெளிப்படையாக, சமதர்மக் கோட்பாட்டினை, தூ! தூ! என்று வீசியிருக்கிறார். இந்த அக்கிரமத்தை எப்படி முனுசாமியால் சகிக்கமுடியும்? இருதயம், பணக்கார வீட்டுப்பிள்ளைகளுக்கு, ஒரு வானவில்லாகயிருக்கலாம்—அடிக்கடி மாறலாம். ஆனால், ஏழையின் கூடத்திலி

(8-ம் பக்கம் தொடர்ச்சி)



குடிசைவாழ்வோர் மாநாட்டில் வந்து கலந்துகொண்ட மேயர் முனுசாமி

பா ‘வி’ மன்னிப்பு

தோழன்

சீகமாக வீசிக் கொண்டிருந்த காற்றின் தடம் புரண்டதுபோல் உணர்வு தட்டிற்று.

காற்று சுழன்றடித்தது!

சித்திரைத் திங்கள், தீக் காற்றை வாரித் தெளிக்க வழியேற்படுத்திக் கொண்டதை மக்கள் உணர்ந்தனர்.

விடுதலைத் தேவன் வியர்க்க விறுவிறுக்க வான் முகட்டை நோக்கினன்.

“அங்கே எதைப் பார்க்கிறீர்கள்?”

விடுதலைபுரியின் மாந்தர்கள் ஒரு முகமாக கேட்டனர்.

‘வடமீனைப் பார்க்கிறேன்’

“இப்போது அதற்கென்ன வந்தது?”

“அதற்கொன்றும் இல்லை நான் சரியான பாதையில் தான் பயணம் செய்துகொண்டிருக்கிறேனு என்பதை சரிபார்த்துக் கொள்கிறேன்”

‘அது திசை மாறித் தெற்குத் திசையில் தோன்றுமா?’

‘இருக்கலாம்!’ விடுதலைத் தேவன் கேலிக் குரலில் நறுக்குத் தெறித்தாற்போல் பதில் சொன்ஞன்.

‘உங்களுக்கு என்ன வந்தது?’

‘சில வல்லரசுகள் வேடிக்கையாக மிதக்கவிடும் விண்வெளிக் கப்பல்களைப் பின் தொடர்வது தான் விடுதலைப் பயணத்தின் சரியான பாதை என்று இந்த நாட்டின் ஒரு மூலையில் சிலர் சொல்வது கேட்கிறது’

“ஒன்றுக்குமே உதவாத நரிகள்போடும் ஊளையிரச்சலை இந்த மனித குலம் யுகயுகமாகக் கேட்டு வருகிறதே!

ஓ, நரிகளா? அவைகள் ஆயிரம் ஆண்டுக்கு முன்பு ஊளையிட்டது போலல்லவா இன்றைக்கும் அரட்டிக் கொள்கின்றன!

அவைகள் நிரந்தரமான நரிகள் தான். பரிணமத் தத்துவம் அவைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வாறு மாறுதலடைகிறது என்பதை, அந்த டார்வின்கூட சரியாகச் சொல்ல மறந்துபோனன்! ‘அவைகளுக்கு மீட்சியேயில்லை’

அவைகளுக்கு மட்டுமல்ல மனித குலத்திலும் சிலருக்கு மீட்சி இருக்க முடியாது போல் தோன்றுகிறது.

‘உண்மை’ உங்களைப்போன்று சிலர் தெரிவிக்கும் இந்தக் கருத்துக்களைப் பொய்யாக்கிக் காட்டவே தான் ‘துவஜம்’ கட்டிப் புறப்பட்டேன். என்னை-என் பயணத்தை-என்னுடைய நல்லகுறிக்கோளைத் கடுத்து நிறுத்தவே சில மனிதப் பிண்டங்கள் ஆங்காங்கு முயன்றிருக்கின்றன. அந்த ஓதியமிலாறுகள் இந்தநாட்டிலும் வேர்விடத் தவறியதாகக் காணேம்.

வேர்விடவில்லை! வெட்டிக் கொண்ட கரத்திற்கு மருந்து போட்டு கட்டிக்கொள்கிறது அந்தக் கூட்டம்.

வெட்டிக் கொண்டார்களா?

ஆம் அவர்கள் பெரிய தோர் அங்கத்திலிருந்து தங்களைத் தாங்களே துண்டித்துக் கொண்டார்கள்.

பெரிய உருவத்தின் மூளை இடும் கட்டளையை- நிறைவேற்றுவது கேவலம் என்று கருதிக் கொண்ட சில வேண்டாதஉறுப்புகள்—உதிர்ந்தாலும் உருவத்தை பாதிக்காத உறுப்புகள்—தங்களைத்துண்டித்துக் கொண்ட வீரச் செயல்தான், இந்த நாட்டின் அரசியல் புரட்சியாக இப்போது கடை பரப்பப்படுகிறது.

வயதாகி வளர்ந்த பிறகு அந்த உறுப்புக்களுக்கு விரக்தி வரக்காரணமென்ன?

*

ஒன்றும் தெரியாதவன் போல் விடுதலைத் தேவன் நாட்டுமக்களை நோட்டம் பார்த்தான்.

*

கடந்த பனிரெண்டு ஆண்டு வளர்ச்சியில் ‘வாழ்க’ ‘ஒழிக’ கோஷம் போடுவதிலேயே உன்னைப்பின்பற்றும் நாங்கள் செய்து காலம் கழித்து வந்திருக்கிருேமாம், அடி உதை, வேட்டு இரத்தம் என்பன போன்ற காரியங்களில் இறங்கி, நாட்டு மக்களை சமாதானத்தையே விரும்புகின்ற பாமரமக்களை கிடுகிடுக்க வைக்கவில்லையாம்.

விடுதலை இயக்கங்களுக்கு உரிய குணம், அழிக்கப்படவேண்டிய எதிராளியை வெறுத்து ‘ஒழிய’ வேண்டும் என்று நினைப்பதும், வேண்டிய மக்களை அன்பினுல், பிணைத்து அவர்கள் ‘வாழ’ வேண்டும் என்று நினைப்பதும் தானே. பனிரெண்டு ஆண்டு காலம் அல்ல, இரண்டு மூன்று தலைமுறையாயினும் இந்த உணர்ச்சி ஆழமாக வேரூன்றுவது தான் விடுதலைப்பயணத்தின் சரியான செயல் முறையாக இருக்கமுடியும்.

எதிரிலிருந்த மக்களுக்கு விடுதலைத் தேவனின் இந்த விளக்கம் புரியவில்லை, ஒருவரையொருவா வியப்புக் கண்களால் பார்த்துக் கொண்டனர்.

மக்களுக்கும் புரியவில்லை என்பதைக் கண்ட விடுதலைத்தேவன் தொடர்ந்து சொன்ஞன்.

எதிரி ஒருவன் வலிய வந்தோ, நாம் சந்தித்தாக வேண்டிய நிலையிலோ எதிர்ப்படும்வரை, அவன் மீது அவனுடைய ஆகாத செயல்கள் மீது எல்லா மக்களுக்கும் வெறுப்புணர்வு தோன்றும்படி செய்வதுதான் விடுதலை இயக்கத்தின் வேலையாக இருக்கமுடியும்.

பாஸ்டன் பார்ட்டியை நான் அமெரிக்காவில் நடத்திக் காட்ட சந்தர்ப்பம் ஏற்படுவதற்கு எத்தனை காலம் காத்திருக்க வேண்டியதிருந்தது தெரியுமா?

பாஸ்டிலி ஒடைபடும் சில மணி நேர வேலைக்கு பிரஞ்சு மக்களை எத்தனை தலைமுறை பண்படுத்த வேண்டியிருந்தது தெரியுமா?

ஜார் மன்னனின் கொடுங்கோன்மையை எத்தனை தலைமுறை காலமாக அனுபவிக்க வைத்துக் காத்திருந்தேன் தெரியுமா?

பத்தொன்பதாம் நூற்ருண்டில் இந்தத் துணைக் கண்டத்தில், ஏற்படுத்திய வெள்ளையர் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி, இருபதாம் நூற்ருண்டில் தான் எதிரியைச் சரியான இடத்தில் சந்திக்க வைத்து, எடுத்த காரியத்தை முடிக்கும்படி செய்தது என்பது தெரியுமல்லவா?

நாங்கள் படித்துக் கரைத்துக் குடித்த சரித்திரங்களையே நீயும் அடுக்கிக் காட்டி ஏன்நேரத்தை வீணுக்குகிருய்? தெரிந்து கொள்ள வேண்டியதைச் சொல்வது எங்களுக்கு நலம் பயக்கும் கூட்டத்திலிருந்த மனிதன் உரத்து இப்படிக் கூவினுன்.

உண்மை தான்! உங்களுக்குள்ள நேரம்-ஏன் வாழ்நாள் கூட மிகக் குறுகியது தான்! ஆகவே உங்கள் காலத்திலேயே எதனையும் சாதித்துவிடத் துடிக்கும் மமதையில் அரசியல் இலாபம்பெறத் துடிக்கும் மேற்கொள்ளும் செயல் முறைகளுக்கு விடுதலை இயக்கத்துக்குரிய இலக்கணத்தையே வரையறுத்துக் கொள்ளாதீர்கள்.

மனிதன் தோன்றி மறையும் பிராணி!

விடுதலை—நீண்டநாள் — அல்லது சில தலைமுறைகளை—விழுங்கிய பின் வெளிப்படும் ஒளிக் கதிர்.

தோன்றி மறையும் மனிதனின் ஆசாபாசங்களுடன், விடுதலை உணர்வு எப்போது இணைந்து நடக்கும் என எதிர்பார்க்க முடியாது! ஆகவே, விடுதலைப் பயணத்தில் ஈடுபட்டிருப்போர், இன்றைக்கு யாருக்கு‘வாழ்க’ கோஷம் போடப்படுகிறதோ, அவர்க

(11-ம் பக்கம் காண்க)

காஞ்சூறு இலையும் மனோரஞ்சிதமும்!

எதற்கும் பயன்படாது, இந்த இலை, மேலோட்டமாகப் பார்க்கும் போது அதைப்பற்றிப் புரிந்துகொள்ள முடியாது. தப்பித்தவறி, அது மேலே பட்டுவிட்டால் போதும். ஒரே அரிப்பாகயிருக்கும். இதேபோல, காஞ்சூறு இலைச்சுபாவம் கொண்ட மனிதர்களும் உண்டு. அவர்களைத் தூரத்தே நிறுத்திவைத்திருக்கும் போது ஒரு தொல்லையும் இல்லை, தொட்டணைத்து மகிழ்ந்து விட்டால் போதும், உடனே, அரிக்க ஆரம்பித்துவிடும். இலையின் குணம் அது! மனோரஞ்சிதம் இருக்கிறதே, தன்னை வளர்த்தவர்கள், தன்னைத் தொடாவிட்டாலும் தொட்டாலும் ஒரேவித மணத்தைத் தான் தரும். இதனைப்பறித்துத் தலையிலே வைப்பதாலும் தீமையில்லை; பறிக்காமல் விட்டு வைப்பதாலும் தொல்லையில்லை. கழகத்தில் அன்றுமுதல் இன்றுவரை பலர் இருக்கிருர்கள். அறிஞர் அண்ணுவிடம் நெருங்கும்போதும், தூர இருந்து அவர் சொல்வதைச் செய்தாலும் ஒரே நிலையில் இருப்பவர்கள் வேறு சிலர் உண்டு. ‘அண்ணுவுடன் நெருங்கி அவர் மனதைத் தங்களால் முடிந்தவரையில் அரித்துவிட்டுச் செல்கிறவர்கள். அப்படிப்பட்ட காஞ்சூறுகளில்ஒன்றுதான் ‘போனது’ மனோரஞ்சித மலர்கள்தான் நாம்!!

60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

[சென்ற இதழ் தொடர்ச்சி]

வெறுப்பு, விபரீதமானது, செந்தாமரைபோல் இருக்கவேண்டிய உள்ளத்தை, எருமை புகுந்த குளமாக்கிவிடக்கூடியது! என்ன ஆனாலும் சரி—எதையிழந்தாலுஞ் சரி—எப்படியாவது அவனை ஒழிக்கவேண்டும் — அவர்களை வஞ்சம் தீர்க்க வேண்டுமென்கிற "வெறி" உண்டாகிவிடின், நெறி பிசகும்—வழி தவறும்—கோரத் தாண்டவமே நடக்கும்!!

யூதர்கள் மீது, ஹிட்லர் கொண்ட வெறுப்பின் விளைவாக, அவன் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், ஆயிர ஆயிரமாகும். அவன், தன் கைப்பட எழுதிய 'மெயின் காம்ப்' எனும் நூலில் எழுதுகிறான், "எனக்கு இந்த யூதர்களைக் கண்டாலே பிடிக்கவில்லை — இவர்களையெல்லாம் ஏண்டா ஆண்டவன் படைத்தான் என்றே ஆத்திரமாக இருக்கிறது. எங்கே பார்த்தாலும் செல்வாக்குடன் அவர்கள் இருப்பதா? அடாடா! எப்படியெப்படிச் சுகமாக வாழ்கிறார்கள் தெரியுமா !! இப்படி வாழ அவர்கள் இலாயக்குள்ளவர்களா எனின், எந்த வகையிலும் தகுதியற்றவர்கள். ஆரிய இனம் (தான் ஆரிய இனம் என்றே ஹிட்லர் சொல்லிக்கொண்டான்) வகுத்துக் கொண்டு வாழ்ந்த வாழ்க்கை முறையுடன், இந்த யூதர்களின் முறைகளை ஒப்பிட்டால், சீச்சீ, மகாக் கேவலம். இந்த மானிடப் பதர்கள், உலகில் இருப்பதே ஆபத்து! அதிலும் ஜெர்மனியில் இருப்பதே ஆபத்து!!"

இப்படிப்பட்ட மனவளம் கொண்டவனிடமிருந்து இரக்கமும் அன்பும் எப்படிக் கிடைக்கும்? யூதர்களின் பிரச்னையைத் தீர்த்துக் கட்டுவதற்கென்றே, ஒரு இலாகாவை நிறுவினான், ஹிட்லர். அந்த இலாகாவின் மந்திரியாக ஹிம்ளர் என்பவன் விளங்கினான்.

அவனுக்கு உதவியாக, யூதர்களின் பிரச்னைக்கு முடிவு காணுவதற்காக ஈச்மேன் நியமிக்கப்பட்டான். பிரச்னைக்கு முடிவு என்றால், யூதர்களின் மனதைத் திருத்துவது என்றல்ல. இந்த எண்ணம் எப்படிவரும் ஹிட்லருக்கு? அவன்தான் 'வெறுப்பு' என்னும் எரிமலையை இருதயத்தில் வளர்த்துக் கொண்டுவிட்டானே! அப்படிப்பட்டவனிடம் அன்பும் கருணையும் எப்படி ஏற்படும்!!

தன் வசம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை, ஹிம்ளரும், ஹிட்லரும் கண்டு பிரமிக்கும்படிச் செய்தான், ஈச்மேன். ஆங்காங்கு அகதிகள் முகாம் அமைக்கப்பட்டன —ஐசுவரியவான்களாக ஜெர்மனியில் வாழ்ந்த யூதர்கள் ஆண்களும் பெண்களுமாக அங்கே கொண்டுவந்து அடைக்கப்பட்டனர்—அவர்களைக் கொல்ல தனி தூக்குமேடைகள் தயாரிக்கப்பட்டன—மின்சார நாற்காலி மூலம் தலைதுண்டிக்கப்படுதல், போன்ற பல்வேறு முறைகளை ஈச்மேன் கண்டான். அவைகளை ஒவ்வொரு நாளும், நிறைவேற்றவும் செய்தான்.

"வெறுப்பு" உச்சக் கட்டத்துக்கு வந்த சமயத்தில்தான் ஹிட்லர் மூலம், உலகப்போர் மூண்டது! போரைச் சாக்கிட்டு எல்லா யூதர்களையும் பிணமாக்கிவிட, ஹிட்லர் முடிவுசெய்தான்- ஜெர்மனியிலிருந்த யூதர்களைக் கொன்று பழிவாங்கியதுமட்டுமல்ல—அவன் வென்ற போலந்து நாட்டிலிருந்த யூதர்களையும் ஒழித்தான்!! அந்த 'ஒழிப்பினை'ச் செய்தவனும், ஈச்மேன், தான். உலகப் போர், மூண்டபோது இதான் வேலையாம்!!

"யூதர்களை ஒழிப்பேன்—ஆரியத்தை நிறுவுவேன்—அதற்காகவே போர் தொடுக்கிறேன்" என்றே, ஹிட்லர் அப்போது கூவினான். ஒருவேளை ஹிட்லர் வெற்றி பெற்றிருந்தால், ஐரோப்பாவில் 'யூதர்' என்கிற பெயரே இல்லாமலும் செய்திருக்கக்கூடும். 'ஆரியம்' என்று, ஹிட்லர் வர்ணித்தது, இங்கே நாம் குறிப்பிடுகின்ற முறையை அல்ல. நாம் பழக்க வழக்கங்கள், மூடநம்பிக்கைகள் புராணப் புளுகுகளை வைத்து 'ஆரியம்' என்கிறோம்! ஹிட்லர் சில முறைகளைச் சொல்லி, இதான் ஆரியக் கோட்பாடு—நான் ஒரு ஆரியன்—ஆரிய இனம் இப்படிப்பட்டது—என்று 'வெறி' கொண்டலைந்தான் !

போலந்தின் மீது படையெடுத்து, ஜெர்மனி வென்ற 1942—43-ல் மட்டும் அங்கேயிருந்த முப்பது லட்சம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனராம்! ஒரு பக்கம் ஹிட்லரின் படைகள், பாய்ந்து தாக்கி வெற்றி பெற்றன. வெற்றிபெற்ற ஊருக்குள் நுழைந்த ஈச்மேன், உடனே தன் வேலையை ஆரம்பித்து, யார் யூதர், பிடி, கொண்டா, என்று வெட்டி, வெட்டி, இரத்தம் ஓடஓட தன் பணியைச் செவ்வனே செய்திருக்கிறான்!!

இந்த வேலை ஜெர்மனி வெற்றி பெற்ற ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு நாட்டிலும், "சிறப்பாக" நடந்திருக்கிறது. அங்கேரி, போன்ற இடங்களில், ரஷியப் படைகள் நுழையாமலிருந்திருந்தால், அங்கும் பலலட்சம் கொலையுண்டிருப்பார்களாம்!!

இப்படி, போரின் நடுவே, ஹிட்லர் தன் நீண்டநாள் வெறுப்பைத் தணித்துக் கொண்டான். இவ்விதம், யூதர்கள் கொல்லப்படுகிறார்கள்—குத்தி எரியப்படுகிறார்கள்—கூட்டம் கூட்டமாகச் சாக



ஈச்மேன் விசாரிக்கப்படுகிறான்

டிக்கப் படுகிறார்கள்—மனிதகுலம் வெட்கித் தலை குனியும்படி நடக்கிறது அட்டூழியம்—நூறு இருநூறல்ல, ஆயிரம் பத்தாயிரமல்ல, இலட்சம் அதுவும் ஐந்துலட்சம் பத்துலட்சம் என்று படுகொலை செய்யப்படுகிறார்கள் — என்கிற சேதியைக் கேட்க, யூதர்கள் அனைவருக்கும் பிறப்பிடம் என்று சொல்லப்படும் பாலஸ்தீனத்திலிருந்த (இப்போது இஸ்ரேல்!) யூதர்கள், பதறினர், ஓடிவரும் எந்த யூதனையும் வரவேற்கச்சித்தமாயினர். எழியண்டா, சோலைக்கு ஆளாகும் குடும்பங்களைக்கொண்டுவர என்று முயன்றனர். இதற்காக ஏராளமான பணத்தைத் திரட்டி, ஜெர்மன் தளபதிகளுக்கு ஆள்வைத்து, லஞ்சம் கொடுத்துக் காப்பாற்ற முயன்றனர். இந்த வழிகளால், ஜெர்மனியின் பிடிப்பிலிருந்த சில நாடுகளிலிருந்து ஒரு சிலர்தான் காப்பாற்றப்பட்டனரே ஒழிய, இலட்சம் இலட்சமாக மாண்டோரைக் காக்க இயலவில்லை! அப்போது, காப்பாற்றப்பட்டவர்கள் தான், இப்போது, ஈச்மேன் வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப் படுகிறார்கள்!!

* * *

நியாயத்துக்கு — நியாயமான முறைகளில் போராடும் போது, அறிவுக்கு முதலிடம் தரப்படும் வெறியாட்டம் போடும்போது, அறிவாவது அன்பாவது. ஆர்ப்பாட்டமும், அதை முடித்தேன் இதைச் சாய்த்தேன் எனும் அவசரமும் தானே, அரசோச்சும்.

ஹிட்லர் வெறியுடன் பாய்ந்து அண்டை அயல்நாடுகளை 'கபளீகரம்' செய்து விட்டு, ஆடினான், "ஐரோப்பாவையே நான் ஆளப் போகிறேன்! பேர்லின் ஐரோப்பாவுக்குத் தலைநகரமாகும். ஜெர்மனியின் ஆட்சி, எங்கும் நடக்கும்" என்று. அதே வேகத்தில், பல நாடுகளையும் வென்றான். இந்தப் படையெடுப்பினூடே, அவனது தனிப்பட்ட யூத இனவெறுப்புக்கும்,விருந்து தந்து கொண்டிருந்தான். இச்சமயத்தில்தான்-- 1945 —இல் அவனது படைகள் ரஷிய மண்ணில் விழுகின்றன, எனும் செய்திகள் வரலாயின! ரஷிய மண்ணைவிட்டு, ஜெர்மானியரைத் துரத்தியது மட்டுமின்றி, ரஷ்ய வீரர்கள் ஜெர்மனிக்குள்ளும் நுழைந்தனர். அதே சமயம், அமெரிக்கப்பிரிட்டிஷ் படைகளும் மேற்குத் திசையிலிருந்து ஜெர்மனி பிடித்த நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு பாய்ந்து கொண்டிருந்தன. பேர்லின் வீழ்ந்தது! ஹிட்லர் முதலியவர்களுக்கேற்பட்ட கதியே புரியாமல் போயிற்று தினசரி வீழ்ச்சிச் செய்திகள் வந்து கொண்டிருந்தன—அந்தச் சமயம் என்ன செய்தானாம், தெரியுமா, ஈச்மேன்?

இதோ, அவனே சொல்கிறான், கேளுங்கள்:

"ஜெர்மனி பிழைக்காது என்கிற சேதிகள் வந்து கொண்டிருந்தன. நேசநாடுகளின் (அமெரிக்க, பிரிட்டிஷ்) படைகள் ஆஸ்திரியாவுக்கு அருகில் இருப்பதாகத் தகவல்கள் எட்டின. கடைசி வரையிலும் எதிர்த்துப் பார்த்து விட வேண்டும் என்பதே என் எண்ணம! என் வசம், இன்னும் கொல்லப்படவிருந்த யூதர்கள் இருந்தார்கள். எங்களுக்கு முன்னதாக, நிராயிதபாணிகளான அவர்களைப்போகச்சொல்வேன். நம்மால் சாவதற்குப்பதில், எதிரிகளால் சாகட்டுமே ! அவர்கள் சாகும்போது, பின்னே நின்று கொண்டு, எதிரிகளை நாங்கள் தாக்க முடியுமல்லவா? இப்படி நான், என்னாலியன்ற வகையில் போரை நடாத்திக்கொண்டு இருந்தேன். ஆஸ்திரியாவின் ஓரமுள்ள ஆல்ப்ஸ் மலையின் பகுதியில், எங்களுடைய கடைசிப்படை அணி

விசாரணையை, வெளியில் 'டிரான்ஸ்மிட்டர் ரேடியோ' மூலம் மக்கள் ஆவலுடன் கேட்கின்றனர்.

வகுப்பு இருந்தது, பேர்லின் வீழ்கிறது என்ற செய்தி எட்டியதுமே எங்களில் பலருக்கு 'அந்திய கட்டம் வருகிறது' என்பது தெளிவாகி விட்டது. இப்படி

நமது பாசறை

4 சி. பி. சிற்றரசு

மகரந்தப் பொற்றுகளை மலர்த்தேனில் கரைத்தெடுத்து
முகையவிழா முல்லையினுல் முழுத்தாழை மடலேட்டில்
தீட்டிவைத்த தேன்எழுத்தா? திராவிடரின் புகழனைத்தும்
கூட்டிவைத்த நெடுங்கணக்கா? கூன்முது கையும்நிமிர்த்தி
நீட்டிவைக்கும் சித்த வைத்தியமா? எனக்கேள்வி
போட்டு மனம் குழம்பப் புத்தகத்தில் வரலாறு
காட்டிவைத்து நம் கண்ணைக் கட்டிவைத்த அறியாமை
ஓட்டிவைத்துக் கொண்டிருக்கும் உயர்ந்த எழுத்தாளர்!

படித்தறிந்த மேதை! எவனையுமே
எடுத்தெறிந்து பேசும் இயல்பு!—பல்லை
உடைத்தெறிவேன் எனமிரட்டி உடைக்காமல்
அவன சினத்தைக்
கெடுத்தெறிந்து அஞ்சிக் கிடுகிடுக்க வைத்து,
உயிரைக்
கொடுத்தும் பழகும் நண்பனுயப் பகைவனையும்
மாற்றுகின்ற ரஸவாதி!

மேடையிலே பேச மிகுந்தமன ஆசையுடன்
ஓடிவந்த கருங்கடலா? உருவெடுத்த பெரும்புயலா?
கோடை நடுப்பகலில் கொதிக்கின்ற செங்கதிரா?
வெடிக்கும் எரிமலையா? வெலவெலத்து மெய்நடுங்க
இடிக்கும் இடியா? என நினைக்கக் கண்முன்னர்
மேடையிலே முழங்குகின்ற மிகச்சிறந்த பேச்சாளர்!
கொட்டும் குருதிகொட்டிக் கொள்கை வளர்க்கும்
நமைத்

திட்டும் திமிரெடுத்த தீவட்டித் தடியர்களை
விட்டு விளாசி வெதும்புகின்ற பேச்சாளர்!

நரைமீசை படபடக்கும்!
நல்லமுகம் கடுகடுக்கும்!
மடங்கும் முன்கை! மாற்றானை "முட்டாளே!
கோதாவில் இறங்கிப்பார்!" எனக் கூறித் தமிழத்துச்
சோதாவுக் கும்கொஞ்சம் சொரணை வரச் செய்கிற
மேடைப் 'பயில்வான்!'

குறுகுறு வெனநடக்கும் கும்மாள நடைத்தமிழில்
துறுதுறு வெனப்பார்த்து தொடங்கி முழங்கி
காட்டு நடைகாட்டிக் கடினச்சொல் கலந்துப்பின்
பாட்டு நடைகாட்டிப் பலநடையும் மிளிரவிட்டு
வயிறு வலிக்கவைக்க வடிவெடுத்த கதைச் சிரிப்புக்
கயிறு திரிக்கின்ற கலைவாணர்! பேச்சுக் கலைவாணர்!

யார் இவர்?
கருத்தில் கடுஞ்சினத்தில்
கண்கவரும் மீசையில்
இவர் 'ஹிட்லர்!
கழகத்து நக்கீரர்.'
சிந்துக் கவியோடு சந்தக் கவிகுவிந்த
செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைச் சிற்பி
சி. பி. சிற்றரசு

'பொன்னிவளவன்'

பொரு நிலை வந்தால், என்ன செய்யலாம் என்பது பற்றி நாங்கள் முன்னரே, தீர்மானித்திருந்தோம். அநாவசியமாக எதிரிகள் கையில் சிக்கிச்சாகாமலிருக்க எங்கள் படை வீரர்களை "சிவிலியன்கள்" என்று சொல்லிக் கொண்டு தப்புமாறு தெரிவித்திருந்தோம். இராணுவ வீரர்கள் என்றால் தானே, எதிரிகள் கைது செய்வார்கள்? சாதாரண மக்கள் என்ருல் ஒன்றும் செய்யமாட்டார்களல்லவா! அதனுல், எங்களது மேசைகளில் ஆயிரம் விதமான "லெட்டர் பேடுகளை" தயாரித்து வைத்திருந்தோம். ஒவ்வொரு லெட்டர் பேடிலும், ஒவ்வொரு கம்பெனி—கடை—கல்லூரி—பள்ளிக்கூடத்தின் பெயர் இருக்கும். இந்த ஆள் இங்கே வேலை செய்தவன்-இவன்; எங்களிடம் கிளார்க்காக இருந்தான் — இப்படிப் பொய்க் கையெழுத்திட்டு, எதிரிகள் கேட்டால் காட்டிக் கொள்ளுங்கள் எனச் சொல்லி எங்கள் வீரர்களையெல்லாம் கணக்கு தீர்த்து அனுப்பிக் கொண்டிருந்தோம்! ஒவ்வொருவரும், கேட்டளவுக்குப் பொன் கொடுத்தோம். என்னுடைய கார் டிரைவர் வந்து "சார்! இத்தனை ஆண்டுகளும் உங்களுடனிருந்தேன். இனிமேல் ஊருக்குப் போயாவது நிம்மதியாக வாழ்கிறேன். இருக்கிற சண்டை லாரிகளில் ஒன்றை, எனக்கு விற்றதாக எழுதிக் கொடுங்கள்" என்ருன்.

மிகவும் மகிழ்ச்சியுடன் கொடுத்தேன். அவன் இப்போது ஜெர்மனியில் எங்காவது ஓரிடத்திலிருப்பான்! என் கூட இருந்த ஒரு பெண் டைபிஸ்டு மட்டும், என்னை விட்டுப் போக மறுத்தாள். அவளுக்கு எங்களுக்கிருக்கும் ஆபத்தைச் சொல்லி, அனுப்பிவைப்பது மிகச் சிரமமாய் விட்டது. நான் யூதர்களை நடத்திய விதத்தால், என் பெயர், பிரபல்யமாகியிருந்தது, எதிரிகளிடம் நான் சிக்கினுல், மரணதண்டனையும் உறுதி.

இவ்விதம் மரணத்தை எதிர்நோக்கிக்கிடந்த நேரத்திலும், என் மன உறுதி தளரவில்லை! இருந்த உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு, வீரர்களையும் அழைத்துக் கொண்டு, ஆல்ப்ஸ் மலையைத் தாண்டி நேசப்படையினரை, தாக்குவதென்று முடிவு செய்து ஏற்பாடுகளைச் செய்யலானேன். அப்போது ஒரு ஆள் ஓடிவந்து செய்தியைக் கொடுத்தான் —"சரணுகதி அடைந்து விட்டோம். சண்டை வேண்டாம்" என்று எங்கள் தளபதி, அனுப்பிய உத்திரவு, அது. தலைகுனிந்தேன்! ஆங்காங்கே அமெரிக்கப் படைகளுடனும் பிரிட்டிஷ் படைகளுடனும் சேர்ந்து கொண்டு என் தேசத்து ஆண்களும் பெண்களும் ஆடுவதாகச் சொன்னுர்கள். எந்த ஹிட்லரைக் கண்டால், "ஹெர்ஹிட்லர்!" என்று ஆனந்தத்தோடு வாழ்த்தினுர்களோ, அதேமக்கள் ரஷியர்களை வாழ்த்தி "வாழ்க!" போட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னுர்கள். போரின் முடிவு இப்படியாகும் என்று எதிர்பார்த்த, என்னுடைய நிலையிலிருந்த பலர், தத்தம் மனைவிமக்களுக்கு இதுவரையில் கிடைத்த தங்கத்தையெல்லாம் கொடுத்து 'நடு நிலைமை நாடுகளுக்கு' அனுப்பிக் கொண்டிருந்தனர்.

என் கையில் சிக்கிக் கிடந்த யூதர்களில் ஒருத்தனிடம், இப்படியொரு ஆசை எனக்கு இருக்கிறது என்று சாடை காட்டியிருந்தால் போதும் அவனும் தப்பி எனக்கும் ஒரு இடம் கொடுத்திருப்பான். என்னுல், எனது மனைவி மக்களுக்குத் தங்கத்தைக் கொடுக்கமுடியவில்லை. திராட்சை குலைகளைத்தான் கொடுத்தேன். அதோடு, என் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் ஆளுக்கொரு நச்சு மாத்திரை கொடுத்தேன், 'ரஷியர்கள் கையில் சிக்கநேர்ந்தால், இதைப் போட்டுக்கொண்டு சத்துவிடுங்கள்', என்று சொல்லி!!"

* * *

கொடுமைசாய்ந்தது! வெறுப்பு வீழ்ந்தது! மரணக் கிடங்குகளில கிடந்த யூதர்கள் விடுவிக்கப் பட்டார்கள்! நேசநாடுகள் வெற்றி முரசம் ஆர்த்தன! போர் மேகம் சூழ்ந்து கிடந்த ஐரோப்பாவில் அமைதி ஒளி எழுந்தது! கையில் சிக்கிய முக்கியமான தளபதிகள் பிடிபட்டார்கள்! விசாரணை நடத்தப்பட்டு, அக்கொடுங்கோலர்கள் சுடப்பட்டார்கள்! ஆனுல், அறுபதுலட்சம் பேரை போரிலே அல்ல, வெறுப்புக்காக வெறியுடன் கொன்ற வீணன் ஈச்மேன் மட்டும் அகப்படவில்லை. எங்கே ஈச்மேன்? எங்கே போனுன்? எங்கேயிருப்பான்? அவன் குடும்பம் என்னவாயிற்று?—என்று, நேசநாடுகள், கேட்டன! தேடின! கடைசியில், முயற்சி பலிக்காமற்போகவே, கைவிட்டும் விட்டன!!

ஆனுல் யூத மக்கள் எப்படி மறப்பார்கள் ஈச்மேனை? அக்கொடியவனை எப்படியாவது, பிடித்திடவேண்டும் என்கிற ஆர்வம், யூதர்களுக்குப்போய்விடவில்லை. தங்கள் அண்ணனை, தந்தையை, தாயை தங்கையை, உலகமே கேள்விப்படாத வகையில் கொன்று குவித்த அக்கொள்ளிவாய்த் தலையனைக் கொண்டுவந்து தண்டனை தராவிடின், நாமென்ன மனிதரோ, என்கிற உறுதி கொண்டனர், யூதர்கள்! இந்த உறுதி, வலுவடையும் வகையில். அவர்களுக்கென ஒரு நாடும் அரசும் அமையலாயிற்று!!

*

"நாடற்ற கூட்டமாமே நாம்? ஜெர்மனி வேட்டையாடுகிறது, நம்மவர்களை. இங்கிலாந்தோ, ஷைலக் ஒரு யூதன். யூதர்கள் பேராசைக் காரர்கள்' என்று ஷேக்ஸ்பியர் எழுதியதைக்காட்டி எகத்தாளம் செய்கிறது. பிரான்சிலோ, பிரஜா உரிமை இல்லை, எம்மவர்க்கு! இப்படி எங்கேயிருந்தாலும் நம்மவர்கள் படும்பாடு நாய் படாது, நமது இனம், இழித்தும் பழித்தும் பேசப்படவேண்டிய ஒன்ரும். ஓ! என் மக்காள்! உணரீரோ, நீர்? இன்றுள்ள ஜெர்மனியும், பிரான்சும் இங்கிலாந்தும், அமெரிக்காவும் உருப்பெறுவதற்கு முன்னரே—அவர்கள் எல்லாம் போற்றித்துதிக்கும் இயேசு நாதர் பிறப்பதற்கு முன்னமேயே, எழிலோடு வாழ்ந்தோர்,நாம். ஆனுல் இன்று ஒண்ட இடமின்றி அலைகிரும். ஒரு பக்கமோ கிருஸ்துவர்கள் நம்மை ஏளனமாக்ப் பார்க்கிருர்கள்! நம்மைச் சுற்றியுள்ள எல்லா பக்கங்களுமோ அரபு நாடுகள்!! அலை

(௮-ம் பக்கம் பார்க்க)

மனிதாபிமானத்தை மறக்கலாமா!

நட்புக்கு - பொதுச்சேவைக்கு - ரத்தத் தொடர்பா தேவை?

"தசாவதார" சம்பத்!

திரு. ஈ.வெ. கி.சம்பத், தமிழுக்கென்று ஒரு தனித் தேசியத்தைக் கண்டுபிடித்து, அதற்கென்று ஒரு கட்சியையும் உண்டாக்கி அதற்குத் தன்னைத் தானே, தலைவன் என்றும் முடிசூட்டிக் கொண்டுவிட்டார்.

இப்பொழுதெல்லாம் புதுக் கட்சி வைப்பது—கலைப்பது—மற்றொன்றுக்குத் தாவுவது—காலை வாரிவிடுவது—காலைக் கட்டிப் பிடிப்பது—என்பதெல்லாம், இன்றையத் தறிகெட்ட அரசிய்லுக்கு சர்வ சகஜம். இவ்வகையில் திரு. சம்பத்தின் புதுக் கட்சிக்கு தீர்க்காயுளோ, அற்பாயுளோ, பிறந்து விட்டது—பெயரும் வைத்தாய் விட்டது—இனி அது தானே இயங்க முடிந்தாலும் முடியாவிட்டாலும், ஏதோ ஒரு கட்சியின் ஒட்டுத் திண்ணையாவது கிடைக்காமற்போகாது. அதற்கு ஏற்பாடு செய்து கொண்டுதான் அவர் கட்சியையும் ஆரம்பித்திருக்கிறார். ஆகவே சம்பத்தின் புதுக் கட்சி உதயத்தில் நமக்கு அதிருப்தியுமில்லை. திருப்தியுமில்லை.

ஆனால் இதுவரை தன்னை ஒரு இடது சாரியாகவும், அரசியல் வாதியாகவும், வளர்த்துக் கொண்ட அவர், புதுக் கொடி பிடித்துப் புறப்படும்போதே வலது சாரிக் குழாயை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, இடதுசாரிகளுக்கு எச்சரிக்கை விடுப்பதுதான், அவருடைய எதிர்கால அரசியலை நிகழ் காலத்துக்குள்ளேயே அடக்கிக்காட்டுகிறது.

திரு. சம்பத், தி. மு. க. தலைவர்களில் ஒருவர் என்பதையும் அரசியல்வாதி என்பதையும்விட ஈரோட்டு நாயக்கரின் அண்ணன் மகன் என்பதில்தான் அவருக்குள்ள முக்யத்துவமே அடங்கியிருக்கிறது. நாயக்கரின் அண்ணன் மகனாக இருந்தும், திரு. அண்ணாத்துரையோடு சேர்ந்து வெளியேறினாரே என்ற ஒரு தகுதிதான், தி.மு.க. வில் அவருக்கு ஏற்பட்ட தனித்வமே! இதை சம்பத்தின் மன சாட்சியே ஒப்புக் கொள்ளத் தயங்காது. ஈ. வெ. ராவின் அண்ணன் மகனாக இல்லாவிடில் சமபத் தனிக் கட்சி அமைக்கும் அளவுக்கு தி. மு. க. வில் முக்யத்துவம் பெற்று, அங்கு சேகரித்த செல்வாக்கை இன்று வெளியே தனக்காகப் பயன்படுத்தும் வாய்ப்பு ஒருபோதும் ஏற்பட்டிராது.

இவ்வகையில் எல்லோருமே அன்று சம்பத்தும், தி. க. விலிருந்து வெளியேறியதைக் கொண்டு, ஈ. வெ. ராவின் முரட்டுப் புத்தியை இகழ்ந்தார்கள்! கொள்கைக்காக குடும்பத்தையே எதிரியாக்கிக் கொண்டவர் என்பதில் சம்பத்துக்கு ஒரு புகழ்ச்சி! குறிப்பாக சம்பத் வெளியுலகிற்கு அதிக அளவு அறிமுகமானதே தி மு. க. வுக்குப் பிறகேயன்றி தி.க. வில் இருந்தபோது அல்ல என்பது நாடறிந்த விஷயம்.

கொள்கைக்காக குடும்பத்தைப் பகைத்துக் கொண்டவர் என்பது உண்மையிலேயே அரசியலுக்கு ஒரு உயிரான அம்சம்.

இன்றைக்கு சம்பத் கொஞ்சம் வயது முதிர்ந்தவர். அன்று தி. க. விலிருந்து தி. மு. க. ஆனபோது வயது கொஞ்சம்தான்.

இப்பொழுது அவர் தி. க. வுமல்ல, தி. மு. க. வுமல்ல—ஏதோ ஒரு கட்சி.

அன்று கொஞ்ச வயதாக இருந்தபோது சம்பத்துக்கு இருந்த கொள்கை பாசம், இன்று வயதும் அனுபவமும் கூடியிருக்கிறபோது இல்லாமற் போய்விட்டது. என்ற நிலையை ஆராய்கிறபோது தோழர் சம்பத்தை பொறுத்தவரை வயது ஏறுகிறது—கொள்கைப் பிடிப்பு இறங்குகிறது—என்றுதான் பொருள் படுத்த முடிகிறது.

கொஞ்ச வயதில் திராவிட நாடு அதற்கும் கொஞ்சம் கூடிய வயதில் தமிழ்நாடுகூட அல்ல அதற்கும் குறைவான ஒரு நாடு—இன்னம் கொஞ்சம் வயதுகூடி அதாவது அண்ணாதுரையின் வயது வரும்போது கொங்கு நாடு—ஈ. வெ. ரா. வயது வரும்போது ஈரோடு என்று கேட்பார். அவரது கடந்த காலமும், நிகழ்காலமும், எதிர்காலத்தை ஒரு தாலுகா அளவுக்குத்தான் உருப்படுத்திக் காட்டுகிறது! இது நமது அநுமானமல்ல-50ம் வருடத்தில் திராவிட நாடு கேட்ட சம்பத்—61-ஆம் வருடத்தில் தமிழ் நாடு கேட்டால் 70-ம் வருடத்தில், என்ன நாடு கேட்பார்? அது நாடாக இருக்குமா? வீடாக இருக்குமா? என்பதை தெரிந்துகொள்ள பெரிய விஞ்ஞான மூளையா வேண்டும்?

வயது கூடக்கூட புத்தியும் கொள்கையும் முதிரும் என்பதுதான் எல்லோருமே கண்ட முடிவு ஆனால் சம்பத் இயற்கைக்கே விதிவிலக்காகிவிட்டார்.

50-ம் வருடத்தில் திராவிட நாட்டை வற்புறுத்திய சம்பத்—அதற்காக ஆயிரக்கணக்கன மேடைகளில் ஏறி கர்ஜித்த சம்பத்—அதையே சொல்லி எம். பி. தேர்தலில் ஜெயித்த சம்பத்—60-ல் திராவிட நாடு இராக்கனவு கூட அல்ல, பகற்கனவு என்று புது முழக்கம் செய்தால், 50-ல் அவருக்கிருந்த புத்தி 60-ல் புரண்டுவிட்டது என்று அர்த்தமா? அல்லது 60-ல் இருந்த புத்தி 50-ல் இல்லை—அன்று சொன்னது புத்தியீனம் அல்லது சிறு பிள்ளைத் தனம்—இன்று சொல்வதுதான் சரி என்று அர்த்தமா? எதை நம்பச் சொல்கிறார்! அன்று ஏமாற்றினேன்—அல்லது ஏமாறினேன் என்று சொல்கிறாரா?

இன்று சொல்வதுதான் அதாவது 61-ல் சொல்வதுதான் சரி என்றால் இதற்கு காலவரம்பு எவ்வளவு? 70-ம் வருடம் வரை இந்தக் கொள்கை நீளுமா? அல்லது குறுகித் தேய்ந்து வேறு உருக் கொள்ளுமா? எப்படி இவரை நம்புவது? என்று பரவலாகக் கேட்கிறார்கள்! நாம் கேட்கவில்லை. ஒரு நாடு, கேட்டு வாங்கும் கடைச் சரக்கல்ல—தியாகத்தின் மூலம் தான் அந்நாட்டைப் பெறவேண்டுமென்ற கொள்கை யுடையவர்கள் நாம்—எனவே நமக்கு இந்த நாட்டு விவகாரத்தில் அக்கறையில்லை !

மதுரையிலிருந்து வரும் 'கண்ணகி' ஏட்டின் கருத்து.

10 வருடத்துக்கு ஒரு நாடு வீதம் கோரிக்கொண்டே இருந்தால் இவரை எப்படி நம்புவது? என்று அந்த வட்டாரமே கேட்பது நமது காதில் விழுவதால் இதைத் தொட்டோம்.

இம்மாதிரி தசாவதாரமெடுக்கும் சம்பத்தை இதர கட்சிகள் தான் எப்படி நம்பி அவரை இணைக்க விரும்பும்?

திரு. அண்ணாதுரை, சம்பத்தின் நெட்டோட்டங்களை—குணப் பாங்குகளை—செயல் முறைகளை—நன்கு அறிந்து, பல வருடங்கள் பழகியவர். சம்பத் மனமறிந்து விட்டும், விலகியும், செல்லக்கூடிய அளவுக்கு திரு. அண்ணாதுரையிடம் சம்பத் பாசம் உண்டு. அவரையே விரும்பாமல் விலகிக் கொண்ட சம்பத்தை—அவரோடேயே ஒன்றி, இணைந்து இயங்க முடியாத சம்பத்தை—ஆதித்த, நாரும், சிவஞான கிராமணியாரும் எப்படி நம்புவார்கள்?

பழக்கம், பாசம், பாங்கு இணைப்பு ஆகியவற்றில் அண்ணாதுரைக்கும் சம்பத்துக்கும் இருந்த இணைப்பு உண்மையிலேயே சக்தி வாய்ந்ததாகும். அரசியில்—கட்சி—கொள்கை—என்பதெல்லாம் ஒரு புறமிருக்க சகோதர பாசத்தில்—நட்புறவில் அண்ணாதுரையிடம் சம்பத்துக்கு தனி இடம் உண்டு என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள்.

இவ்வளவு பாசத்தோடு பழகியவரிடமே பகைமை கொண்ட சம்பத், பிறரோடு எப்படிப் பழகி எதைச் சாதித்துவிடப் போகிறார்?

சம்பத் போக்கில் மற்றொரு சகிக்க முடியாத தன்மை காணப்படுகிறது.

இவ்வளவுக்குப் பிறகும் திரு. அண்ணாதுரை சம்பத்தை முரட்டுத் தனமாகத் தாக்கவில்லை. பாசத்தைக் கொஞ்சமும் விடாமல் ஏதேதோ எழுதுகிறார்—பேசுகிறார். இதற்கு சம்பத் கொடுக்கும் பதில் மனிதப் பாங்கையும்—பாசத்தையும் எங்கோ விரட்டிவிட்டு, மிருகத்தனத்தோடு போய் ஒட்டுகிறது. உனக்கும் எனக்கும் என்ன உறவு? நீ என் உடன் பிறவியா? ரத்தக் கலப்புண்டா? என்றெல்லாம் ஏதோ, எங்கிருந்தோ நேரில் குதித்தவர்மாதிரி குதறுகிறார் சம்பத்! காங்கிரஸ் வாடை திரு. சம்பத்தை இந்த அளவுக்கு மனிதாபிமானத்திலிருந்து பிரித்துவிட்டதற்காக நாம் வருந்துகிறோம்.

உடன் பிறந்தவர்களைவிட, உற்ற நண்பன் எவ்வளவோ மேலாக இயங்குகிறான். உறவை விட நட்பு அதிகம் பிணைப்புக் கொள்கிறது: அநுபவத்தில் பார்க்கிறோம். ஒரு நாள் மனம் திறந்து பழகியவர்கள் வாரிசு விடாமல் குடும்ப நண்பர்களாக இயங்குவதையும், பலபத்து வருட உறவினர் ஒரே நாளில் துரோகிகளாக மாறிவிடுவதையும் பார்க்கிறோம்.

இந்த நடைமுறையில் சம்பத் நட்புக்கு ரத்தத் தொடர்பை எதிர்பார்க்கிறார். ரத்தத் தொடர்புதான் இவருக்கு முக்கியமென்றால், பொது மேடைக்கு இவர் வந்திருக்க வேண்டியதில்லை—பழைய மளிகைக் கடையிலேயே இருந்திருக்கலாம்.

அண்ணாதுரையின் பாசத்திற்கு ரத்தத் தொடர்பு கேட்கிற இவர் ஆதித்தனாரிடம் எதைக் கேட்பாரோ!

பொதுச் சேவை செய்ய அரசியலில் இறங்கிய ஒருவர், நட்புறவுக்கு ரத்தத் தொடர்பை எதிர்பார்ப்பதை சம்பத்துதான் முதன் முதலில் உலகிற்கே அறிமுகப் படுத்துகிறார்!......

—0—

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 | வெள்ளி 19-5-61 | கதிர் - 11

உழைப்போம்!

• தீரர்களும் சிறந்த அரசியல் தெளிவும் நிரம்பி வழியும் திருச்சி மாநகரிலே இரு கிழமைகளுக்கு முன்பு கூட்டம் போட்டுக் கொக்கரித்தாராம், 'நாடாளும் பெரியார்' காமராசர், நாமெல்லாம் அழியப்போகிறோமென்று! நம்மைவிட்டுச் சம்பத் விலகிய செய்தி சர்க்கரையன்றோ அவருக்கு. ஏற்கனவே, ஆதரிக்க 'அப்பா' இருந்தார். இலைமறைகாயாக ஆதரிக்க 'பிள்ளை'யும் புறப்பட்டிருப்பது, பூரிப்பைத் தானே தரும் புவியாளும் பூமானுக்கு. அதனால், "பாரும். பாரும். இப்படியே பலர் விலகிக் கடைசியில் ஒரேயடியாகச் சாகப்போகிறது, தி, மு. க." என்று சாபம் கொடுத்ததாக "மெயில்" ஏடு மிகப் பெரிய அளவில் போட்டு, முதலாளித்துவத்துக்கு, காங்கிரசாதிக்கம் காட்டிவரும் உதவிக்கான தனது "நன்றியை"த் தெரிவித்திருக்கிறது!!

அன்பே! அமுதே! என்று ஆரத் தழுவித்தன் குழந்தையைக் கொஞ்சுகிறாள், தாய். அம்மா! அம்மா!— என்று தன் கை நீட்டி; மழலைபேசி சிரிப்பை சிந்துகிறது,சேய். இது வன்றோ நான் பெற்ற இன்பம்— உழைத்து அறுத்துத் திரும்பும் என் உள்ளத்தை உவகைச்சோலையாக்கும் இப்பேறு பெற்றார் சிலரே' என்று, களிப்பான், இக் காட்சி காணும் கணவன்; என் குடும்பம் இது—ஆல்போல் தழைத்து விளங்குகிறது என்று, மகிழ்வர், வயதான தாயும் தந்தையும் இருந்தால். இந்த எழில் மிகு சூழ்நிலையை நல்ல கவிஞன் கண்டால்'ஏடெடுத்து இதைப்பற்றி ஒரு கவிதை தீட்டலாமெனக் கருதுவான்! கண்டது ஒரு கழுகு எனின், என்ன நினைக்கும்? அது மழலையைத் தான் கண்டதா! மங்கையின் புன்சிரிப்பு தரும் அழகு தான் அதற்குப் புரியுமா! "என்ன கொடுமை. இவர்களை யார் இப்படி உலாவச் சொன்னார்கள். ஏனின்னும், பிணமாகாமல், பேசிக் கொண்டு இருக்கிறார்கள். சிரிக்கும் அந்தச்சேயின் உடல், எவ்வளவு தளதளவென்று இருக்கிறது. புள்ளி மானைப்போல் விழிக்கும் அந்த மங்கை செத்தால், எத்தனை நாளைக்குப் புசிக்கலாம். இவர்களெல்லாம், எப்போது சாவார்கள்?" என்று தானே கழுகு எண்ணும். உண்மைக் கவிஞனுக்கு மணம் தெரியும்! கழுகுக்கு என்ன தெரியும்? பிணம் தானே அறியும்!! இதனால் தான் பெரியோர் சொல்லினர் போலும், கற்பூர வாசனையினைக் கர்த்தபம் அறியுமோ என்று. உதாரணத்தைச் சொல்லிடின் கூட, "பார்! பார்! என்ன உதாரணம் சொல்வதை. ஏ! அப்பா! எவ்வளவு பெரிய வன் செயல்!!" என்று வம்புக்கு வரக் கூடும், சம்பத். இண்டு கிடைக்குமா, சந்து எங்கே உள்ளது, என்று தேடி அலைந்து, நம்மைத் தாக்குவதற்கு காரணங்கள் கண்டுபிடிக்கும் அவர், எதையும் விடமாட்டார், என் செய்வது, பழமொழி அப்படியிருக்கின்றதே! காமராசரைப் போல, சேலத்திலே நடந்த கூட்டமொன்றில் செப்பினராம், "திராவிட முன்னேற்றக் கழகம் அழியப்போகிற சக்தி" என்று!!

முடிச்சவிழ்ப்பவனுக்கு முழு நிலா ஒரு தொல்லைப் பொருள் தான்—விளக்கேன் எரியவேண்டும், அவியக்கூடாதா என்று தான் திருட்டுப்பூனை விரும்பும்—காவலன் ஏன்? தடையாயிருக்கிறானே விருப்பம் போல் மேய என்றே ஊர்க்கொல்லையில் மேய்ந்து உடலைப் பெருக்கும் மாடு நினைக்கும்—போலீஸ் இலாகா இல்லாவிட்டால் பொழுது விடிவதற்குள் பெரிய சீமானாகி விடலாமே என்று தான் இராக் கள்ளன் எண்ணுவான்—கட்டுப்பாடுகள், காமுகன் கண்களுக்குக் கடும் குடைச்சலையே அளிக்கும்—இப்படி, ஒவ்வொருவரின் மன நிலையையும் சுயநலத்தையும் பொறுத்து, எதனையும் மதிப்பிடும் குணம் மாறும்! திராவிட முன்னேற்றக் கழகம், நிலாவாக, திருவிளக்காக, செந்தமிழ்ச் சோலையாக போலீஸ் இலாகாவாக, இன்றைய தினம் விளங்குவது, "சுயநலமே ஜீவசுபாவம்" என எண்ணுவோருக்கு எரிச்சலாகத் தான் இருக்கும்!! எப்படி கழுகு, கனிவுள்ள குடும்பம் சாகாதா என்று சஞ்சலப்படுமோ, அப்படித்தான் அரசியலிலும் கழுகு மனம் கொண்டவர்களுக்கு, விழிப்புள்ள ஒரு இயக்கம் வீழாதா, என்கிற ஆசைவரும்.

அரசாங்கத்தின் உதவி நமக்குக் கிடைக்கும் என்று நம்புகிற நிலையிலே இருக்கிறார், சம்பத்! கழகத்தை விட்டு வந்தவரே மறைமுகமாகக் காங்கிரஸ் பிரச்சார பீரங்கியாக விளங்குவார் என்று எதிர் பார்க்கின்ற சூழ்நிலையிலே இருக்கிறார், காமராசர்!! இருவருடைய ஆசையும், இன்றைய தினம், நமது 'அண்ணாவின் குரல்' அழிய வேண்டுமென்பதுதான்.

ஆசைபலிக்குமா என்பது ஒரு புறமிருக்க, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, நாம் செல்ல வேண்டிய வழி எது என்பதை கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் உணரவேண்டும். "அப்படிப்பட்ட உணர்வு எங்களுக்கில்லையா? என்ன செய்ய வேண்டும் நாங்கள்! சொல்லும்!!" என்று வீரத்தோடு கேட்கும், தோழர்கள், தெரிகிறார்கள். விழலுக்கு 'வாழ்த்துப்பாடி' நொந்து கிடக்கும் அந்த உள்ளங்கள் எரிமலைகள் ஆகியிருப்பதை நாம் அறியாமலில்லை! சொல்லின் செல்வரே என்று சொன்னவர்கள்—எங்கள் கண்ணதாசன் என்று இறும்பூதெய்தியவர்கள்— இன்றைய தினம் காமராசரைப் போல, 'அவர்களும்' பேசுவதையும் எழுதுவதையும் காணும் போது, அடையும் எரிச்சலை அடக்கிக்கொள்வது, கடினம் தான். ஆயினும் என் செய்வது! அரசியலைப் பொழுது போக்காகவும், பொன் காய்க்கும் சுரங்கமாகவும், கருதிடும் போக்கினர் உருவாகும் போது, நாம் எரிச்சலடைந்திடல் போதுமோ? என்னபயன் தரமுடியும், எரிச்சல்! இரண்டு கல்லை எடுத்து வீசச் சொல்லும்—துரோகி! சுயநலக்காரா! என்று பேசத்தூண்டும். இதனால், அந்த நேரத்து ஆத்திரத்தை தீர்த்துக் கொள்ள முடியுமே ஒழிய, இருதயத்தில் ஏந்தியிருக்கிற எழில் மிகு கொள்கைக்கு இவை, எருவாகுமோ? மாசையும் மருவையும் உண்டாக்குமேயன்றி, மனமகிழும் விதத்தில், செய்யுமோ! அரசியலில், நேற்று முளைத்தது களைப்போல ஆட்டம் போடக்கூடிய நிலையில் இருப்பதல்ல, திராவிட முன்னேற்றக் கழகம். அது செய்யவேண்டிய வேலை எவ்வளவோ உள்ளது— நடக்க வேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கிறது—இந்தச்சமயம் பாதையினையும் வேலையினையும் மறந்து பச்சோந்திகள் பால், கவனம் செலுத்தலாமோ!!

நம்மை வீழ்த்தவும் அழிக்கவும் எண்ணுகின்ற அரசியல் மேதாவிகளுக்குப் புத்தி புகட்ட, புதிய புதிய இடங்களில் நுழைந்து, அங்கெல்லாம் கழகக் கொள்கைகளைப் பரப்புவதும். அவர்களுக்காகவெல்லாம் பாடுபடுவதும் தான். இந்த மாதம் இத்தனை கூட்டம் போட்டோம் — அடுத்த மாதம் இத்தனை கூட்டங்கள் போடப்போகிறோம், என்பதோடு இருந்துவிடாமல், இந்தெந்த இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவாளர்களைப் பெற்றோம், இந்தெந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம்தேட புதிதாக ஈடுபடப் போகிறோம், என்று சூளுரை கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சூளினை மேற்கொண்டு, பம்பரம் போல் சுழலும், உண்மையான கழகத் தோழரை தோழர் இரா. சடகோபன் உருவிலே கண்டேன்! அவருக்குத் துணை நின்ற தோழர் சிட்டிபாபுவிடம் கண்டேன்! அவர்களுக்குவேண்டிய ஒத்துழைப்பை நல்கிய சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் பாலன்—பொருளாளர் கபாலி ஆகியோரிடம் கண்டேன்!! "இவர்களிடம் மட்டும் தான் கண்டீரோ? எங்களிடம் காணவில்லையோ!" எனத் தோள் தட்டும், தியாகராய நகர் பகுதிக் கழகத் தலைவர் குமார் கேட்கிறார். உண்மை தோழர்காள், இந்தகிழமை, சென்னையிலே நடந்த குடிசை வாழ்வோர் மாநாட்டினை அமைத்து, அதை வெற்றியாக்க பாடுபட்ட அத்தனை தோழர்களிடமும் நான்கண்டேன். அனைவரின் பெயரினையும், எழுத ஏடுபோதாது என்பதால்விடுகின்றேனே ஒழிய, அவர்களனைவரும் என் குடும்பத்து அண்ணன் தம்பிகள் தானே.

கழகம் எப்படியெப்படி வளர வேண்டும்—நாம் யாருடைய பிரச்னைகளையெல்லாம் நம்முடையதாக்கிக் கொள்ள வேண்டும்—என்கிற ஆர்வத்தோடு, நடைபெற்றதுதான் இம்மாநாடு! இதற்கென யாரிடமும் நன்கொடையோ, பணஉதவியோ பெறவில்லை. மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவனான என்னைக்கூட ஒருவர் கேட்டார்," என்னய்யா! ஒருவருக்குக்கூட ஒரு மாலை கூடப்போடவில்லையே! என்று. அவ்வளவு சிக்கனத்தோடு, நடைபெற்ற குடிசைவாழ்வோர் மாநாட்டுக்கு, சென்னை மாநகரத்திலே உள்ள 356க்கும் மேற்பட்ட குடிசைப் பகுதிகளுக்கெல்லாம் சென்று, அங்கிருந்தெல்லாம் மக்கள் வருமாறு செய்தார், தோழர் சடகோபன்! அந்தத் தோழரைப்போல, நம் தோழர்கள் ஒவ்வொருவரும் ஆயிடின், நாம் எந்த எதிரிகளைப் பற்றியும் அஞ்சவேண்டியதில்லை- மாநாட்டின் பொருளாளரான தோழர் சிட்டிபாபுவைப் போல் சிக்கனமாகயிருந்தால்; நூறு ரூபாய் செலவிட வேண்டிய செயலை பத்துரூபாய்க்குள் முடித்துவிடலாம்— மாநாட்டில் இரவு நடத்த ஒரு நாடகம் வேண்டுமே யென்றதற்கு, அதற்கேன் வீண்செலவு, நானே ஒரு நாடகம் எழுதிப் போட்டு விடுகிறேன், என்றார் சிட்டிபாபு!

"அருமையான நாடகம்! அதிலும் இராவணனை விட்டு விபீடணன் போவதாக" அவர் சித்தரித்து, ஓரிருகாட்சிகளில்நடித்த அந்நாடகம், அடடா, வெகு நன்று போங்கள்!!

மேயர் முனுசாமி மீண்டும் திரும்பி வரவும், கண்டு மக்கள் வாழ்த்தவுமானச் சிறப்பினைப் பெற்ற சென்னை குடிசைவாழ்வோர் மாநாட்டினை முன்னாள் மேயர் தோழர் அப்துல்காதர் அவர்கள் துவக்கி வைத்தார். முன்னாள் துணைமேயர் தோழர் சிவசங்கரன் அவர்கள் தலைமை வகித்தார். மாநாட்டின் தீர்மானங்களை உருவாக்குவதில், நம் கழகத்தின் மூலம் கவுன்சிலர்களான அத்தனைத் தோழர்களும் காட்டிய ஆர்வம், சாதாரணமானதல்ல! குடிசைவாழ்வோர்-வண்டியிழுப்போர்—— சுத்திசெய்யும் தொழிலாளிகள் சங்கம்-என்றாலே, இவை கம்யூனிஸ்டுகளுக்கே ஒத்துவரக் கூடியவை, என்று கருதப் படுவதுண்டு. ஆனால், மாநாட்டின் துவக்குபவரும் தலைவரும், சென்னை குடிசைவாழ் மக்களின் பிரச்னைகளைப்பற்றி ஆராய்ந்தபோது,இத்தனைநாளும் நாம் இதுபற்றிச் செயலாற்றாமல் வாளாயிருந்தோமே என்கிற வெட்கமே என்னை ஊடுருவிச் சென்றது. இப்பிரச்னை சாதாரணமானதல்ல! சிங்காரச் சென்னையென்று கூறப்படும், சென்னைமாநகரிலே சுமார் 8 லட்சம் மக்கள் குடிசைகளிலே கிடக்கிறார்கள். கிட்டத்தட்ட 356க்கு மேற்பட்ட குடிசைப் பகுதிகள் உள்ளன. வேலைதேடி சென்னை வந்து, இங்கேயே தங்கிவிட்ட இவர்களை எங்கும் போகச் சொல்ல முடியாது! ஏனெனில் இவர்களால் தான், பற்பலதொழில்களுக்கு, ஆட்கள் கிடைக்கிறார்கள். இவர்களால் தான் கப்பலிலிருக்கும் சாமான்கள் கடைத்தெருவுக்கு வருகின்றன! மாடிவீடுகளுக்குக் காய்கறிகள் கிடைக்கின்றன! மலம் எடுப்பதிலிருந்து, மலர்மாலை கட்டி, வீடுவீடாகச் சென்று கொடுப்பது வரை, இவர்கள்தான்! உண்ட கலத்தைத் தேய்த்துக்கொடுப்பதிலிருந்து' உண்ணும் பொருளைச் சமைக்கும் விறகு பிளப்பது வரை, ஈடுபடுவது இவர்கள்தான்! சிங்காரமாகப் பலர்வாழ, உடலைக் கொடுத்து உழைக்கும் இந்த உத்தமர்கள் தான் ஒண்ட இடமின்றி, இடம் கிடைத்தாலும் குடிசைப் போட்டுக் கொண்டு, சாக்கடையும் சங்கடமும் நெளியும் வாழ்வில் சிக்கியவர்களாக சிதைந்து கொண்டிருக்கிறார்கள், சிங்காரச் சென்னையில்!! இப்படிப்பட்டவர்களின் பிரச்னைக்கு இரண்டு ஐந்தாண்டுத் திட்டம் போட்டும் இன்னும்ஒருமுடிவினைக் காணவில்லை அரசாங்கம்--புண்ணுக்குப் புனுகு பூசுவது போல, நகரைச் சீர்திருத்தும் சட்டத்தின் பெயரால் இடம் கிளப்பி, ஆங்காங்கே கொண்டுபோய் விட்டு வருகிறது. ஏனய்யா, இப்படிச் செய்ய வேண்டும், அவர்கள் இருக்கின்ற இடத்திலேயே அவர்களுக்கு ஒரு வழி செய்யலாகாதா என்று கேட்டால்-இடம் ஏது என்கிறார்கள். மாநாடு நடந்துமுடிந்த மறுநாளே, சென்னை கோட்டைக்கு எதிரேயுள்ள கன்னியப்ப நகர் எனுமிடத்தில் 300 குடிசைகளைக் காலி செய்தனராம், காங்கிரசார்! குடிசைகளைக் காலி செய்யும்படி போலீசார் பணிக்க குடும்பங்குடும்பமாகக் கலயத்தையும் கைக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு, பாயும் தலையணையுமாய் ஏழைமக்கள் பவனிவருவதைக் கண்டால், அய்யகோ, இதயம் வெடிக்கும்-இதானா சுயராஜ்யம், என்று மனம் துடிக்கும். "ஆமாம்! அவர்களைக் கிளப்பாமல் அங்கேயே வாழவிட்டால், குடிசை வாழ்பகுதிகளை எப்படி சரிசெய்வது." என்று கேட்கும், அரசு. அதற்கு மாநாட்டில் அருமையான யோசனையைச் சொன்னார் நாவலர், "போதிய இடம் பூமியிலே இல்லையே ஒழிய ஆகாயத்திலிருக்கிறது. இடமில்லையென்று ஆர்பரில் வேலை செய்யும் தொழிலாளியை அம்பத்தூருக்கு விரட்டுவதைவிட குடிசைகளிருந்த இடத்தில் ஐந்து அடுக்கு ஆறு அடுக்கு மாடிகளை அமைத்து, அவைகளில் வாழச் செய்யலாம்'! என்பதாக. பதின்மூன்று மாடிக்கட்டிடம் உள்ள சென்னையில் ஐந்தாறடுக்குமாடியுள்ள விடுதிகளை அமைப்பது சிரமமல்ல! இப்போதே "காக்ஸ் சேரி" எனுமிடத்தில் கார்ப்பரேஷன் கட்டித்தந்த மாடிவிடுதிகள், ஓரடுக்குடன் உள்ளன. அப்பகுதியும், சுத்தமாக உள்ளது! அது போல, ஏன் சேரியிருக்கும் இடங்களை ஆக்கலாது?" ஆக்கலாம்! ஆனால் எங்கே போவது பணத்துக்கு! என்பார், காமராசர். எங்கேயும் அவர்போக வேண்டாம்! ஆண்டுதோறும் அழுகிறோமே டில்லிக்கு 70 கோடி ரூபாய்க்கு மேல்——வரியாக. இந்தப் பத்தாண்டு காலத்திலே 70ம் 10ம் 700 கோடி ரூபாய் அழுதிருக்கிறோமே. இந்த 700 கோடியில், ஏன் ஒரு 15 கோடி பெறலாகாது என்றே தி. மு. க. கேட்கிறது 15 கோடி கிடைத்தால் போதும் ஓரளவுக்கு இந்தக் குடிசைவாழ்வோர் பிரச்னையை நல்ல முறையில் சமாளிக்கலாம்!! எங்கே மனம் வருகிறது, காமராசருக்கு? குடிசைகளுக்குப் பக்கத்தில் ஏராளமான காலியிடம் இருந்தால் அங்கே ஒரு பூங்கா கட்டலாமா, அதானே அழகு, என்று இந்த அரசுஎண்ணுகிறதே ஒழிய ஏழை மக்களின் துயரத்தைப் போக்கத் துணிவு எங்கே வருகிறது! உண்மையில், சென்னையை ஊடுருவும் இத்தப் பிரச்னை, ஒரு மனிதப் பிரச்னை. எனவேதான், நண்பர்கள் என்னை அணுகியபோது, மனமுவந்து நானும் ஈடுபட்டேன்! திராவிடமுன்னேற்றக் கழகத்தின் பிரச்னையாக, இதனை, எடுத்துக் கொண்டிருக்கிறோம்!!

* * *

இப்படி ஆங்காங்குமுள்ள கழகத் தோழர்கள், அவதிப்படும் மக்கள் பற்றிய பிரச்னைகளை எடுத்துக் கொண்டு வேலை செய்தல் வேண்டும். கைத்தறியாளர்கள் பிரச்னை போன்றவைகளைக் கழகம் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டதுபோல, தனிமனிதர்களின் பிரச்னைகள் வரை, நாம் ஈடுபட்டு உதவிசெய்து களைந்தெறிந்தாக வேண்டும். அரசியல் விடுதலை நம்முடைய இலட்சியம் என்றாலும், கேடுற்றுக் கிடக்கும் மக்களுக்காக வாதாடி, அவர்தம் குறையினையும் தீர்க்கப் போராட வேண்டும். இந்த வகையில், இப்பிரச்னையின் மாட்டு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)



குறும்புப் பேச்சும், கொள்கை முழக்கமும், 'கழகமேநான்' என்று வாழும் மாநாட்டுப் பொருளாளர் சிட்டிபாபு எம்.சி., நற்றெண்டர் - கழக வீரர் - எடுத்ததை முடிக்கும் ஆர்வக்காளை மாநாட்டுச் செயலாளர் இரா. சடகோபன் எம்.சி, மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் அரங்கண்ணல்.



குடிசை வாழ்வோர் குமுறும் எரிமலைகள்!-என்பதை எடுத்துரைக்கிறார், அறிஞர் அண்ணா.



முன்னாள் மேயர் - முயற்சிச் செல்வர் - அப்துல்காதர் குடிசை வாழ்வோர் மாநாட்டைத் துவக்கிவைத்தார்.

தாத்தா' என்று தன்னைச் சார்ந்த கவுன்சிலர்கள் அழைக்கு மளவுக்கு நல்மனம் கொண்ட, மாநாட்டுத் தலைவர் முன்னாள் துணைமேயர் சிவசங்கரன்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ருந்தவர்களுக்கு ஒரே ஒரு இருதயமும்—அந்த இருதயத்தில் உறுதியான ஒரு கொள்கையும்தானே இருக்கமுடியும்.

புதுக்கட்சியின் போக்கை, கண்டேன். பொறுத்துப் பார்ப்போம் என எண்ணினேன். போன வாரம் நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சம்பத் பேசிய பேச்சைக் கேட்டேன். சம்பத்தின் நோக்கம் தெளிவாகப் புரிந்துவிட்டது. காங்கிரசுக்கு அனுசரணையாக விளங்கவே தேசியக்கட்சியே ஒழிய; வடநாட்டுக்கு வால்பிடிக்கவே தேசியக் கட்சியே ஒழிய, நாட்டுக்கு நல்லது செய்ய அல்ல என்பதைப் புரிந்து கொண்டேன். இனிமேலும், எப்படி அங்கேயிருக்கமுடியும். தனியரசுக் கோரிக்கையை எப்படி நான் விட முடியும்? வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு வரவேற்புரை வழங்க எப்படி என்னுல் சம்மதிக்கமுடியும்? முதலாளித்துவத்துக்குச் சாமரம் விச எப்படி என் மனம் ஒப்பும்? காங்கிரசுக்கு "ஜாலரா" தட்ட என்னுல் எங்ஙனம் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?— என்று கேட்கிருர், முனுசாமி.

கண்ணதாசனைவிட, சம்பத்திடம் முனுசாமி கொண்டிருந்த நெருக்கமும் தொடர்பும் அதிகம்! சம்பத், 'மேயரை'க் காட்டியே தன் கட்சிக்கு மெருகுபோட முயன்ருர்! அப்படிப் பட்ட முனுசாமி, மிகத் தெளிவாகச் சம்பத்தின் போக்கை உணர்ந்து, "அய்யய்யோ! இப்படியா? இது தெரியாமல் போச்சே! என்னமோ, கழகத்திலுள்ள சில குறைபாடுகளை நீக்கி, இன்னும் தீவிர வழியில் போய், தனிநாடு கேட்பார்களென்று பார்த்தால், காங்கிரஸ் கட்சியின் இன்னொரு புது உருவமாகவல்லவா இருக்கிறது!' என்று மிரண்டு நடுங்கி, விட்டுவிட்டு வந்தால் போதும் என்று தவித்திருக்கிருர். ஒரு நாளல்ல, பலநாட்கள், தவித்திருக்கிருர்- தவித்ததோடு மட்டுமின்றி, இது குறித்து சம்பத்திடம், முனுசாமி வாதாடியிருப்பார் என்றும் தெரிகிறது. வாதாடியதைக் கண்டு தான், சம்பத்துக்கு "சீச்சி! இது நம் மாயவலையில் விழாது போலிருக்கிறது," என்கிற எண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும். இதை நான் எதிர்ப்பார்த்தேன், என்று சம்பத் சொல்வதே, போதும், இபபடியொரு.' வாதம்" அங்கே கடுமையாக நடத்திருக்க வேண்டும் என்பதை யூகிக்க!!

அண்மையில் கழகத்துக்கான மாவட்டச் செயலாளர், வட்டச் செயலாளர் முதலிய தேர்தல்கள், ஜனநாயக முறைப்படி, முதன்முதலாக நடந்தஅவல்லவா? ஜனநாயகம்என்ருல். பெரும்பான்மையினர் வெல்வதும், இன்னொரு சார்பினர் தோற்கவும் தானேநேரும்! இப்படித் தோற்றவர்களின் உள்ளம், சலனமில்லாததாக யிருந்தால். வழக்கம்போலக் கழகப்பணிகளில் ஈடுபடுவர். கொஞ்சம் தளச்சியடைவதாக இருந்தால், புதிய நிர்வாகிகள். அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ள தலைமை நிலையம், ஆகியவைகள் மீது "தன்னைக் கவனிக்க வில்லை" என்கிற குறை உண்டாகுமல்லவா? இப்படி ஊருக்கு ஊர், யாரிருக்கிருர்கள் என்று தேடிப்பிடித்து அவர்களைத் தன் ஆதரவாளராக ஆக்கிக் கொண்டார், "குமராபாளையம்" சம்பத்து! அந்தப்பிடிப்பினை வைத்து, தமது கோஷ்டியாகவும் அவர்களை ஆக்கிக் கொள்ள முயற்சித்தார்!! அப்படி முயற்சிக்கும் போது, ஒவ்வொரு வருக்கும் ஏதாவது ஒரு அதிருப்தியிருந்தால், அதை எரிச்சல் எனும் விசிறி கொண்டு வீசி, தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயன்ருர். "ஒகோ! சம்பத்துதான், அண்ணுவைவிடத் தீவிரம். அண்ணு, மிதவாதி. சம்பத், புரட்சிவாதி. எதையெடுத்தாலும் இப்படிச் சண்டையல்லவா போடவேண்டும். கழகத்தில் அதுவேண்டும், இதுவேண்டும் என்று எவ்வளவு தைரியமாகச் சொல்கிருர். ஆகா! சம்பத்தே சம்பத்து!!." என்று பல தோழர்கள் எண்ணினர். அத்தோழர்கள் கழகக்கொள்கை வளரவேண்டுமென்றும் அதிதீவிரத்தால் அப்படி எண்ணினரேஒழிய சம்பத்தின் மீதுள்ள தனிப்பட்ட ஆசையின் காரணமாக அல்ல! ஆனுல் தோழர் சம்பத், அவர்களெல்லாம் தன்னை ஒரு மாபெருந்தலைவனுக ஏற்றுக் கொண்டு விட்டது போலவும்' அரசியலிலே தனக்கொரு புதுச் செல்வாக்குப் பூத்துவருவது போலவும் கருதினுர். இப்படித் தகராறு செய்யும் ஒருநபர் தி, மு. க. கூடாரத்திலே உருவாகிருர், அவர் பெரியாருடையபிள்ளை, 'பெறுமானம்' உள்ளகுடும்பத்துப் பிள்ளை என்றெண்ணிய காங்கிரஸ் முதலாளித்துவமும் தன் பத்திரிகைகள் மூலம் சாமரம் வீசலாயிற்று. நேரம் பார்த்தபடியே "வேலூர்," "உண்ணுவிரதம்," என்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தார். தூத்துக்குடி பொதுக்குழு கூடப்போகிறது என்றதும் ஆந்திர மாநிலத்தோழர்கள் கழக நிதி பற்றிக் கேள்விகேட்பார்களே என்பதால், அது கொஞ்தைத்தாகைபாகயிருந்ததால் அனு (ரூ1050 ஐயும்) அனுப்பிவிட்டு. தன்னைக் கழகத்தின் அவைத்தலைவராக மீண்டும் ஏற்கும்படி 'பேரம்' நடத்தினுர். இப்படி யொரு 'தலைவலி, யை எத்தனை நாளைகுத் தாங்குவது என்று வேதனைப்பட்ட கழகத் தோழர்கள் தான்நின்ருல் தோற்கடித்து விடுவார்களோ; கழகஉறுப்பினராகதா கவிஞர் கண்ணதாசனை எப்படி பொதுக்குழுவுக் நியமிக்கலாம் என்று கேட்டவர்கள் என்ன செய்வார்களோ என்றஞ்சினுர். இன்னும்சேர்க்க வேண்டியதையும். வரவேண்டிய புகழையும் அடைந்தபின் போவதற்குப் பதில் 'இப்போதே போய்விடுவோம்' என்று முடிவுக்கு வந்தார். தி. மு. க.வரலாறு வெளியீட்டு விழாவுக்கு அண்ணு வராததைக் காரணமாகக் காட்டி, விலகி விட்டார்]

இவ்வளவுதூரம் ஏன் சம்பத் போக வேண்டும்—என்ன ஆசையால்— ஏனிப்படிச் செய்கிருர்— என்பது மேயர் போன்றவர்களுக்குத் தெரியவில்லை. சம்பத்திடம் நெருங்கிப் பழகும் போது தானே, அவர் குணம் தெரியும். அவர்களெல்லாம், ஏதோ கழகக் கொள்கைக்குப் புதுமெருகு கொடுக்கப் போகிருர் என்றே மனமார நம்பியிருக்கிருர்கள். பழகப்பழகத்தான், மெருகு, தனக்குக்கொடுத்துக் கொள்ள சம்பத் ஈடுபட்டிருக்கிருர்; கழகத்துக்கல்ல என்பது புரிந்திருந்திருக்கிறது. சம்பத், கழகத்தை விட்டுப் போருகிர் என்றதும் துடிதுடித்துப் போனவர்கள் தோழர் மதியழகன், பார்த்தசாரதி, இராசாராம்,பொன்னுசாமிமுதலியவர்கள். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்தவர் மேயர் முனுசாமி!!

சம்பத்துடைய முழு உருவம் தெரியாமல், தனிப்பட்ட கோபதாபங்களின் காரணமாக, அங்கே இன்னும் சிலர் இருக்கிருர்கள். அவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள் சென்னை மாநகராட்சிமன்ற உறுப்பினர்களான மணிவண்ணன், இரா. சம்பந்தம், முருகேசன், தேவராசன், குமாரசாமி-ரங்கநாதன், முதலியோராகும், இவர்களைப்பற்றி நாம் அறியாதவர்களல்ல! மணிவண்ணன் பொறுமையுள்ள ஒரு தோழர்—பொங்கினுல், எழுவார். அதே போலத்தான் சம்பந்தமும் தேவராசுவும் குமாரசாமியும். ஆர்வமும் ஆத்திரமும் அதிகம் உள்ளவர்கள், இவர்கள் உண்மையிலேயே, சம்பத்தின் கொள்கைகளைவிட, நமமில் சிலர் மீதுள்ள கோபாதபமே இவர்களையெல்லம் அங்கே போகச் சொல்லியிருக்கிறது! இதே போலத்தான் சேலம் தோழர்கள் சிலர் சம்பத்தின் மீதுள்ள தனிப்பட்ட தொடர்பு காரணமாகச் சேர்ந்திருக்கின்றனர்!!

அவர்களுக் கெல்லாம் அன்போடு, தெரிவித்துக் கொள்கிருேம்:

சகோதரர்களே! நன்ருக யோசியுங்கள். இப்போதில்லாவிட்டாலும், என்ருவது ஒரு நாள் நீங்கள் யோசிக்க வேண்டித்தான் நேரும்—சம்பத்தை நீங்கள் எவ்வளவு காலம் நம்ப முடியும்? உங்கள் சுபாவத்துக்கும் அவருக்கும் ஒத்துவருமா! கவிஞர் கண்ணதாசன் எப்படிப் பட்டவர் என்பவது உங்களுக்குத்தெரியாதா!,-புரியாதா இந்த இரண்டு பேரையும் விட்டால், ஒரு அரசியல் கட்சியைக் கட்டிக் காக்க கூடிய நபர் யார் அங்கே இருக்கிருர்கள்?... யோசியுங்கள்— தொடர்பு என்கிற திரை உங்கள் கண்களை மறைக்கலாம்— கொஞ்சம் நீக்கிவிட்டு யோசியுங்கள்- உங்களுடைய அரசியல் இயக்கஆண்டுகளை ஏன் விழலுக்கு இறைக்க வேண்டும்?— ஏன் வீணுக்க வேண்டும்— வாருங்கள்! விரைவில் வாருங்கள்!;- திரும்பிவரும் உங்களை, மக்கள் எப்படி வர வேற்பார்கள் என்பதை, குடிசை வாழ்மக்கள் மாநாட்டில் முனுசாமியை மக்கள் வரவேற்றதன் மூலம் நீங்கள் அறிந்திருக்கலாம். எல்லோரும் வாருங்கள், முடிந்தால் சம்பத்தையும் கூட அழைத்துக் கொண்டு வரமுயலுங்கள்— அவர் வரமாட்டார். அவருக்கு அரசியல் இலாபம் தருகிற கட்டம் இது அதை விட்டு வர, அந்தப் பெரிய இடத்துப் பிள்ளை, விரும்பாது, நீங்கள் வாருங்கள்! வாருங்கள்! வந்து நம் குடும்பத்தின் பழைய இடத்தைப் பெறுங்கள்! அசிங்கம்— பொய்— அவதூறு— கீழ்மை— இந்த முறைகளால், வளரவிரும்பும், தேசீயக்கட்சி எப்படி வளரமுடியும் என்பதை உங்களிலே பலர் என்னைச் சந்திக்கும் போது ஒப்புக் கொண்டீர்கள்— அதனை மறக்கவில்லைநான். அதனுலேயே, இந்த அன்பழைப்பை விடுக்கிறேன்! வருக! எமது நெஞ்சத்தில் மீண்டும் அமருக!!

0—

(7-ம் பக்க தொடர்ச்சி)

தனிக்கவனம் செலுத்திப் பாடுபடும் தோழர் இரா. சடகோபன் எம். சி. ஐப் பாராட்டுகிறேன்! அவரைப் போல, நமது கழக மணிகள்' பற்பல வழிகளிலே கழக ஆக்கத்துக்கான வேலைகளைச் செய்து கொண்டிருந்தால். கழுகுகளைப்பற்றி நினைக்கக்கூட நமக்குநேரமிருக்காது! உதிர்த்து விட்ட சருகுகளைப் பற்றி, அவர் தம் பொய்யுரைபற்றி, எண்ணக் கூட நமக்கு விஞடிகள் கிடைக்காது!! இப்படி ஆக்கவேலைகளை மட்டும் நாம் செய்து கொண்டேயிருந்தால் அன்மர் காமராசர் சொல்கிறபடி, நாமா அழிவோம்? அழிவார்கள், சந்தர்ப்பவாதிகள்! அழிவார்கள், அரசியல்லாபவேட்டைக்காரர்கள்! அழிவார்கள், டில்லியின் கங்காணிகள்! அழிவார்கள் பூர்ஷ்வாக்கள் !!

*

குடிசைவாழ்வோர் மத்திய சங்கம்

இந்த ஆண்டு நிர்வாகிகள்

* * *

தலைவர்

இராம. அரங்கண்ணல்

* * *

துணைத் தலைவர்கள்

முன்னுள் மேயர் அப்துல்காதர் சி.எஸ்.சி.,

முன்னுள் துணை மேயர் சிவசங்கரன்.

பொதுச் செயலாளர்

இரா. சடகோபன் எம். சி.

துணைச் செயளாலர்

கபாலமூர்த்தி எம். சி.

பொருளாளர்

சிட்டிபாபு எம். சி!

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

கடலுக்கு மத்தியிலே அகப்பட்ட சிறுதோணி போல, நம்முடைய பாலஸ்தீனம் கிடக்கிறது. அதுவும், நம்முடைய நாடாக அல்ல! இங்கிலாந்தின் அடிமை நாடாக!! இந் நிலைமாறி, நம்முடைய அரசு மலர்ந்தால், நமது மக்கள் இலட்சக்கணக்கில் சாடநேர்ந்திருக்குமா? வெளிநாடுகளில் ஓடி அலைந்து வாழநேருமோ? ஓ! என் யூத மக்களே, உங்களுக்கென்று ஒரு நாடு அமைந்தால் — நம்முடைய அரசு மலர்ந்தால்—நமது பழம் பெயரான இஸ்ரேல் என்கிற புது ராஜ்யம் ஏற்பட்டால்—வெளி நாடுகளில் பிணமாகும் யூத மக்களே, அலைந்து திரியும் என்னருமைச்சகோதரர்களே! உங்களின் தொல்லை குறையும். துயரம் போகும்,' என்று பாலஸ்தீனத்திலே, கீழே படத்திலிருத்திருக்கும் டேவிட்பென்குரியன் எனும் பெரியார் முழக்க மிட்டார்! பிரிட்டனின் பிடிப்பிலிருந்து விலகி, தனியரசு பெற்ருல், தம்மவர் குறைபோகும் என்று கூவினுர்! அடிமை நாடாகயிருப்பதால் தான். அரக்கமனம் படைத்தோர் யூதர்களைக்கொன்று குவித்தனர்; நமக்கென்று ஒரு நாடிருந்தால், நம்மவருக்கு வருமோ இக் கதி என்று முரசொலித்தார்!

உலகத்திலுள்ள பழம் பெரும் மக்களில், யூதர்களும், ஒருவர். அவர்களது திரு இடத்திலேதான் உலக மகா ஒளியாகிய இயேசு பிறந்தார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, எகிப்தும், ரோமாபுரியும், ஏதென்சும், பாபிலோனியாவும், பழந் தமிழகமும் ஏற்றம் பெற்றிருந்த நாட்களில் சிறப்போடு விளங்கியதாகும் பாலஸ்தீனம்.

காலவெள்ளத்தால், பிறகு சிதைந்தது. யூதர்கள் தமது வியாபாரத்தையும் வாணிபத்தையும் பெரிதெனக் கருதி வெளி நாடுகளுக்கு ஓடலாயினர். உயிர் வாழ தமது நாடுவிட்டு பிறநாடு சென்றனர். பாலஸ்தீனம், முதலாம் உலகப்போரின் முடிவில் பிரிட்டனின் அடிமை நாடாயிற்று'!



பென்குரியன் எழுப்பிய சங்க நாதம், "சகோதரர்காள்! சொந்த நாட்டுக்கு வருக!! ' என்று எழுப்பிய முழக்கம் வெளி நாடுகளில் வாழந்த யூதர்கள் காதில் விழலாயிற்று. இதைக்கேட்ட, யூத மக்கள் மகிழ்ந்தனர்! ஆனுல், ஆண்டிட்ட வெள்ளையனே, திகைத்தனர்—"கூடாது, கூடாது வெளி நாட்டிலிருக்கும் யூதர்கள. பாலஸ்தீனத்துக்குள் வரக்கூடாது. இதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்," என்று தடுத்தனர், சட்டமும் கொணர்ந்தனர். நடுவில் கிடக்கும் பாலஸ்தீனத்துக்குள் வெளியிடத்து யூதர்களும் வந்தால் மக்கள் தொகை அதிகமாகிவிடுமே எனும் பயத்தில், சூழ்ந்துள்ள, எகிப்து—சிரியா—ஜோர்டான் — ஈரான் — இராக்—சவூதி—அரேபியா—துருக்கி முதலிய இஸ்லாமிய நாடுகளும் விரும்பவில்லை. இவர்களின் மன நிலையை அனுசரித்துப்போக விரும்பியதால், பிரிட்டனும் தீவிரமாக எதிர்த்தது!!

யூத மக்களோ—ஹிட்லரின் ஆட்சியில் பட்டபாட்டினை எண்ணினர் — கள்ளக் கப்பல்கள் மூலம், கள்ளப் பாதைகள் வழியாகத் தரை மார்க்கமாகவும் தமது தாயகம் வந்து சேரலாயினர். கேள்வியுற்ற பிரிட்டன், "வராதே. போ. உன்னை விடேன்' என்று தடைகள் போட்டது. பென்குரியன், தடைகளைத் தவிடு பொடியாக்கினுர். யூத மக்கள் வருவோரை, வரவேற்றனர். தினசரி, ஏராளமான யூதர்கள், வெளி நாட்டில் வாழ்ந்த வாழ்வு போதுமென்று வந்து, இறங்கிக்கொண்டேயிருந்தனர். இதைக் கண்ட அரபு நாடுகள், தங்களைத் தாண்டித்தானே போகவேண்டும், அப்படிப் போகிறவர்களை ஒருகை பார்ப்போம் என்று தாக்கலாயினர்! இச்செய்தியைக் கேள்விப்பட்ட பாலஸ்தீனத்து யூதர்கள், அராபியரை அடிக்கவும் தொல்லை கொடுக்கவும் செய்தனர். இதனுல், எல்லையில், தினசரி தொல்லை உண்டாயிற்று. பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அராபியரை யூதர்கள் வெளியேற்ற முயல்வதும், யூதர்களை அராபியர்கள் கசக்கிப் பிழிந்திட முயற்சிப்பதுமான போராட்டம் நடக்கலாயிற்று! இதைக் கண்டதும் பிரிட்டன், நமக்கேன் தொல்லை?' என நடையைக் கட்ட விரும்பியது. "போ!" என்ருர், பென்குரியன் 'போவதென்ருல் எப்படி? நீங்களும் அவர்களும் அடித்துக் கொள்வது நிறுத்தப்படவேண்டும் இதை ஐ. நா சபை செய்தால் நாங்கள் போகத் தயார்" என்று அறிவித்தது,ப்ரிட்டன்.

சின்ன நாடு! சுண்டைக்காய் போலமிகச் சின்னதுதானே!!என்றில்லாமல் ஐ. நா. சபையும், செக்கோஸ்லேவேக்கியா, பொலிவியா, டென்மார்க், பனுமா, பிலிப்பைன்ஸ் முதலியவைகள் கொண்ட ஒரு கமிஷனை நியமித்தது. அக்கமிஷனின் முடிவுப்படி பாலஸ்தீனம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அரேபியர், அதிகம் வாழும் இடங்கள் அவர்கள் வசமும், யூதர்கள் அதிகமுள்ள இடம் யூதர்களிடமும் அளிக்கப்பட்டது. தமக்குக் கிடைத்த பகுதிக்கு, தமது பூமியின் பழைய பெயரான "இஸ்ரேல்" என்பதைச் சூட்டினுர் பென்குரியன்.

வெளி நாடுகளிலிருந்து, இஸ்ரேலுக்குள் மொத்தம் எட்டுலட்சம் யூதர்கள் வந்தனராம்! யூதர்களுக்கு வெளியிடத்தில் இழைக்கப்பட்ட அநீதியைக் கேள்விப்பட்டு, நமக்கென ஒரு நாடு இருந்தால் இப்படி நடக்குமா என்றெண்ணிய பென்குரியனின் முயற்சிக்கு உலகமெங்கிலுமுள்ள யூதர்கள் உதவி செய்து ஊக்கமளித்தனர். பாலஸ்தீனத்துக்கு ஆயுதத் தளவாடங்களை அனுப்ப முயற்சித்த குற்றத்துக்காக அமெரிக்காவிலுள்ள ஒரு யூதப் பிரபு விசாரணைக்கு நிறுத்தப்பட்டபோது அப்பிரபு சொன்னுராம், "நான் ஆயுதம் அனுப்பியதைக் விசாரிக்கிறீர்களே? இதைக் கண்டு துடிக்கும் உங்கள் உள்ளம் என்னவர்கள் வீதி நாய்களாகக் கொல்லப்பட்டார்கள் என்றபோது கொதித்ததா உமக்கு? என் இனம் மரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறது. நான் ஒரு யூதன், என் இனம் யூத இனம், எனக்கும் உலகமெல்லாம் ஒன்று என்பது தெரியும். அப்படி, யார் என் மக்களைப்பற்றி எண்ணுகிறீர்கள். என் மக்களுக்கு வந்த ஆபத்தினின்றும் காப்பாற்றிக்கொள்ள ஹகானு (பாலஸ்தீனத்திலுள்ள யூதர்களின் இரகசிய இயக்கம்) வுக்கு நான் அனுப்பித்தான் வைப்பேன் அதற்காக நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் சரி. தயார்", என்றனராம். இப்படியொருவிழிப்பும், உணர்வும் ஆங்காங்கும் உண்டானதாலேயே, இஸ்ரேல் எழுந்தது; ஏற்கனவே பாலஸ்தீனத்திலிருந்தோர் எட்டு லட்சம் பேராகும்---புதிதாக வந்தோர் ஒரு எட்டு லட்சமாகும். மொத்தம் 16 லட்சம் பேர் கொண்ட இஸ்ரேல், எதிர்த்து நின்ற அராபிய நாடுகளில் நான்கு கோடி பேரிருக்கிருர்கள். இருந்தும், உலகில் தமக்கிழைக்கப்பட்ட அநீதி அவர்களை வீரர்களாக்கியது! சுதந்திரமும் அடையச் செய்தது!



ஆஸ்ட்ரியாவிலுள்ள இந்த இடத்தில்தான் ஹிட்லருடையபடைகள் கடைசியாக இருந்தன.

சுதந்திரம் பெற்ற இஸ்ரேல் சும்மாயிருக்கவில்லை. ஈச்மேன் எங்கே?--என்கிற ஆராய்ச்சியை நடாத்த அரசாங்கமே முன் வந்தது. ஏராளமான பணம் செலவிடப்பட்டது. அறுபது லட்சம் பேரைக்கொன்ற அந்த அக்கிரமக்கனைப் பிடிக்க பதினறு லட்சம் பேரைக் கொண்ட நாடு, தீவிரமாக முனைந்தது. ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வியைக் கண்டது. ஓராண்டல்ல, ஈராண்டல்ல, பத்து ஆண்டுகள் ஆயின பல நாடுகள் ஈச்மென்னை மறந்தே விட்டன!! இஸ்ரேலால், மறக்க முடியுமா? அறுபது லட்சம் பேரன்ருே! விடாமல், முயற்சித்தது.

*

கடைசியில், ஈச்மென்னைக் கண்டுபிடித்தது.

எப்படி! இத்தனை ஆண்டுகளும் அவன் எங்கேயிருந்தான்! அவனை எவ்விதம் அடையாளம் கண்டனர்!!

(அடுத்த இதழில்)

இன்பப் பவனி வரும் எழில்மிகு தமிழ்!

நம் சங்க உறுப்பினரும், நாடு போற்றும் சிறந்த எழுத்தாளரும், பத்திரிகை உலகில் பழுத்த அனுபவம் படைத்தவருமான நண்பர் அரங்கண்ணல் அவர்கள் தொடங்கியுள்ள இந்தக் கிழமை இதழ், நம் சிந்தையைத் தொட்டிழுத்துத் தன்பால் சேர்த்துக்கொள்ளும் சிறந்த வெளியீடாகத் திகழ்கிறது. சுவை ததும்பும் சிறு கதைகள், கவர்ச்சிமிகுந்த கட்டுரைகள், எழுச்சியூட்டும் தலையங்கங்கள், சித்திர விளக்கங்களோடு கூடிய அரசியல் எழுத்தோவியங்கள் ஆகியவை இந்த இதழின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. கேள்வி பதில், மனக்கண் நிருபரின் காணுதபேட்டி முதலிய பகுதிகள் விறுவிறுப்பும் மிகுந்தவையாய் உள்ளன.

அன்பர் அரங்கண்ணலின் அரசியல் கருத்துக்களை ஏற்போரும் சரி, ஏற்க இயலாதோரும் சரி, "அறப்போர்" இதழில் இன்பப் பவனி வரும் எழில்மிகு தமிழுக்காக அதனைப் படிப்பது பயன் மிகத் தருவதாகும்.

தமிழ் எழுத்தாளர் சங்க இதழான 'பாரதி'

தமிழரும் ஆந்திரரும்

5

யாப்பிலக்கணத்தைப் பழைமையாகவே ஒரு பாஷை கொண்டுள்ளதாயின், அஃது இலக்கிய வளத்தையும் முன்பே பெற்றிருந்திருக்கவேண்டுமென்பது திண்ணம். நன்னயபட்டர்க்கு முன்பு வழங்கிய தெலுங்கு நூல்கள் காணப்படாமையால், அப்பாஷை அவர் காலமாகிய 11-ம் நூற்றுண்டுக்கு முன்பு இலக்கியவிலக்கண வளம் பெற்றிருந்ததில்லை என்று கருதப்படுவதற்கு இடமின்றென்பது இதனுல் விசதமாகக்கூடியது. இது நிற்க.

மேற்கூறிய விஷயங்களால், திராவிட ஆந்திர தேசங்கள் சோழர் பிராபல்யமிகுந்திருந்த இரண்டு நூற்றுண்டுகள் வரை இராஜங்கசம்பந்தத்தால் பின்னிக் கிடந்தன என்பது விளக்கமாம். 'வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர்' என்று இலக்கண நூல்களில் எடுத்தாளப் படுந்தொடர், சோழர் ஆந்திரரின் மேம்பட்டு விளங்கிய இக்காலத் தெழுந்த வாக்கியமாகவே கொள்ளத்தக்கது. இந்நிலைமை 12-ம் நூற்றுண்டுமுடிய நின்றது. 13-ம் நூற்றுண்டிலே சோழரது வலிமை குன்றவும், ஆந்திரதேசமும் பிறவும் அவர்கள் கையைவிட்டு நழுவலாயின. இவ்வாறுனதற்குக் காரணம் மேற்கே ஓரங்கல் நாட்டில் காகதீயவரசர் வலிமை பெற்றோங்கியதேயாகும். இவர்களில் முதற் பிரதாபருத்திரன் என்பான் (1162—1197) மிகப்பிரபலனுய்ச் சோழராட்சிக்கு உட்பட்டிருந்த வேங்கி நாட்டைத் தன் குடையின் கீழ்க் கொண்டுவந்தான். இவன் காலத்துச்சோழன், மூன்றுங்குலோத்துங்கன் என்பான். இவன் காலத்தும் இவன் மகன் மூன்றும் இராசராசன் காலத்தும் கம்பநாடர் என்ற கவிச்சக்கரவர்த்தி விளங்கினர் ஆவர். எக்காரணத்தாலோ இப்புலவர்க்கும் சோழவேந்தற்கும் கடும்பகைமை முற்றியதென்றும், அதனுல் சோழனுடன் கோபித்துக் கொண்டு கம்பர் சோணுட்டைவிட்டகன்று, மேற்கூறிய ஓரங்கல் வேந்தனைக் கொண்டு அவனையடக்க வெண்ணி அவனிடஞ் சென்றனரென்றும் தெரியவருகின்றன. "கம்பர் பிரதாபருத்ரனிடத்திற்போய் அவன் அடைப்பை கட்டிவரப் பாடிய வெண்பா" என்ற தலைப்புடன் உள்ள பழைய செய்யுளொன்று தமிழ்நாவலர் சரிதையிற் காணப்படுவது வருமாறு!—

"அவனிமுழு துண்டு மயிரா
வரத்துன்

பவனி தொழுவார் படுத்தும்—
புவனி

உருத்திரா நின்னுடைய ஓரங்க
ணுட்டிற்

குருத்திரா வாழைக் குழாம்"

'பூமிலுள்ளாரெல்லாம் வந்துண்ணுவதாலும், அயிராவதம் போலும் பட்டத்தியானையின்மேல் நீ பவனி வரும் போது உன்னைப் பார்த்த பருவமாதர்கள் காமவெப்பம் ஆற்றுமற் குளிர்ச்சிக்காகப் பரப்பிப் படுத்தலாலும், அரசே! உன்னுடைய நாட்டில் வாழைகள் குருத்தில்லாமற்போயின' என்பது இதன் பொருள். 'வாழைகள் குருத்தில்லாமற்போயின' என்று தக்க சந்தர்ப்பமொன்றிற்கொடுக்கப்பட்ட ஸமஸ்யையைச் சமயோசிதமாகப் பாடிமுடித்துக் கம்பநாடர் அப்பிரதாபருத்திரனை மகிழ்வித்தனரென்பது இதனுற் புலப்படுகின்றது. இவ்வேந்தன் கவிஞரைப் பெரிதுங்கௌரவித்துச் சிறப்பித்து வந்தவன் என்பது, இவன் பெயரால் 'பிராபருத்ரீயம்' என வழங்கும் அலங்கார நூலாலும் அறியப்படும். இவ்வாறு வலிமை பெற்ற ஆந்திர வேந்தனிடஞ்சென்று தம் பெரும் புலமையால் அவனை வசப்படுத்தி அழைத்து வந்து, சோழன்முன் அவன் தனக்கு அடிமை போல நிற்கும்படி செய்து தம்மாற்றலைப் புலப்படுத்தினர் இப்புலவர் பெருமான் என்று தெரிகின்றது. ஆயின் இங்ஙனஞ் செய்த புலவரைப் பற்றி எத்தகையவெண்ணம், சோழன் கொண்டிருத்தல் கூடும்? அப்புலவரால் தனக்குப் பகையரசன் விளைக்குங்கேடு திண்ணம் என்பதை அறிந்த அவன், கம்பநாடரைக் கொல்லக் காலம் பார்த்துக் கொண்டே, அவரிடம் நட்புடையவன்போல நடித்து வந்தான்.

அதனை உண்மையாகக்கருதிச் சோழனுடன் பழகிவந்த கம்பர் ஒருகால் அரண்மனைக்குட் புகுந்த போது, அவ்விடத்துக் கட்டப்பட்டிருந்த புலியொன்றை அவன் அவிழ்த்துவிடச் செய்ய, அஃது அவர் மேற்பாய்ந்து வந்த நிலையிலே, அரசன், அப்புலியை எய்பவன் போலக் கம்பரையே தன்னம்பால் எய்து வீழ்த்தித் தன் பகைமைத் தீர்த்துக் கொண்டனன். அம்பு பாய்ந்து வீழ்ந்த அப்புலவர் பெருமான், நடந்த நிகழ்ச்சியை அறிந்துகொண்டு சோழனை நோக்கி,

"வில்லம்பு சொல்லம்பு மேத—
கவே யானுலும்

வில்லம்பிற் சொல்லம்பு வீறு
டைத்து—வில்லம்பு

பட்டுருவிற் றென்னையென்

பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி"

என்று சபித்துப் பாடினர். இங்ஙனம் சபிக்கப் பெற்றவன் மூன்றுங்குலோத்துங்கனேனும் அவன் மகனேனும் ஆதல் வேண்டும். இவருள் எவராயினும் தெய்வப் புலவராகிய இவர் வாக்கின்படியே சோழவமிசம், மூன்றும் இராசராசனுக்குப்பின்பு வலிகுன்றி நிலைகுலைந்த தென்பதைச் சரித்திர பூர்வமாக நாம் நன்கறியலாம். ஓரங்கல் உருத்திரனைக் கம்பர் தம் வாக்குவன்மையால் வசப்படுத்தி அவன் தமக்கு அடைப்பை கட்டிவரச் செய்த செய்தியையே, சேரனைக்கொண்டு அவர் அவ்வாறு செய்வித்ததாகவும், அம்புபட்டிறந்தவன், கம்பரன்றி அவர்மகன் அம்பிகாபதி என்றும் இக் காலத்தார் மாற்றிக் கதையெழுத, அவையே இப்போது உண்மைச் செய்திகள்போல வழங்கிவருகின்றன. கம்பநாடர் பிரதாபருத்திரனிடஞ் சென்றுவந்தனரென்பதற்கு ஏற்ப, அவரருளிச் செய்த இராமாவதாரமென்று பெயர் கொண்ட இராமாயணத்திலே,

"தாண் மிடைந்தன தம்மி
மிடைந்தென"
(எழுச்சி-30)

"அக்கட விராவணற் சுமைந்த
வாற்றலே"
(புத். மந்திர. 32)

"மசரத மனையவர் வரமும்வாழ்
-வும்"
(திருவவ. 22)

"கிச்சிடையிடுமெனக் கிளக்கின்
ருர் சிலர்"
(பிணிவீட். 3)

எனவருந் தொடர்கள் வருகின்றன. இவற்றுள், தம்பி (தாமரை), அக்கட (இரக்கக் குறிப்பு), மஸ (மாயை, பொய்; மசரதம்—பேய்த்தேர், கானல்), கிச்சு (நெருப்பு) எனக் கன்னடத்தும் தெலுங்கினும் வழங்கும் சொற்களை அப்புலவர் பிரயோகித்திருத்தல் அவர் அந்நாட்டார்களுடன் நெருங்கிப் பழகி வந்தவரென்பதைக் குறிப்பிக்கக் கூடியதன்றோ? மேற்கூறிய சரித்திரங்களினின்றும், ஆந்திர கன்னட தேசங்களை ஆண்ட அரசர் தமிழ்ப் பெரும் புலவர்களையும் ஆதரித்துப் பெரிதுங் கௌரவித்து வந்த செய்தி நன்கு விளங்கும்.

இனி, சோழர் ஆதிக்கங்குன்றிய இரண்டு மூன்று நூற்றுண்டு கட்குப்பின்பு, தெலுங்கர் தமிழரைக் கீழ்ப்படுத்தியாண்ட காலவிசேடத்தைக்காணலாம். சோழர் ஆதிபத்தியத்தின் கீழ் அமைந்த சிற்றரசர்களும் சாமந்தர்களும், அத்தலைமையரசாங்கம் நிலைகுலையவும் தாமே பெரியவுஞ் சிறியவுமான நாடுகட்குச் சுவாதீனத்தலைவர்களானுர்கள். அக்காலத்தே வடக்கிலிருந்து வேகமாகப் படையெடுத்துவந்த துருக்கவரசர் ஆந்திர நாட்டிலும் தென்னுட்டிலும் புகுந்து சூறையாடினுர், அப்போது, தென்னுட்டின் சநாதன தர்மங்களைக் காப்பதற்கென்றே விஜயநகர ராஜ்யம் உதயமாயிற்று. 14-ம் நூற்றுண்டில் ஆரம்பமான அம் மஹாராஜ்யத்தின் பலபராக்கிரமங்களால் தென்னுடு முழுமையும் பாதுகாக்கப்பட்ட வரலாறு, சரித்திரவறிஞரெல்லாம் நன்கறிந்ததே. அவ் விஜயநகர வேகாதிபத்தியத்தை அம்பி மாநகரிலிருந்து ஆண்டு வந்த அரசர்களும் அவர் பிரதிநிதிகளும்! தமிழ் நாட்டவரிடத்தும் அந்நாட்டுத் தேவாலயங்களிடத்தும் அபிமானமும் ஆதரவும் மிக்குள்ளவராயிருத்தனர் என்பதற்கு வேண்டிய பிரமாணங்கள் உள்ளன. அவ்வரசர் பெருமக்களிலே மல்லிகார்ச்சுனராயர் (1449-1466 விருபாக்ஷராயர் 1461—1485) காலங்களில், தமிழ் நாட்டின் இராசப்பிரதிநிதியாய் அனுப்பப்பட்டு ஆட்சிபுரிந்து வந்தவர், சாளுவத்திருமலைராயர் என்பார். தென்னுட்டிற் பல வருஷம் அப்பதவியை நிர்வகித்து வந்த இவர், தமிழில் அறிவுடையராயிருந்ததோடு, தமிழ்ப்புலவர்களிற் சிறந்தவர்களைப் பெரிதும் ஆதரித்தும் வந்தனர். இவர் காலத்திற்றுன் காளமேகப்புலவர் என்ற ஆசுகவிச்சிங்கம் விளங்கியது.

திருமலைராயர் சபைக்குக் காளமேகம் முதலில் எழுதிவிடுத்ததாகத் தமிழ்நாவலர் சரிதையிற் கண்ட பாடல் அடியில் வருமாறு:

"தூதைந்து நாழிகையி லாறுநா
ழிகையினிற்

பலசந்த மாலை சொலவும்

சூழுலா வந்தாதி யேழுநா
ழிகையினிற்

றெகைபெற வகுத்தோதவும்

பாதஞ்செய் மடல்கோவை பத்-
துநா ழிகையினிற்

பரணியொரு நாண் முழுது
-நீள்

பாரகா வியமெலா மீரிரு தினத்
தினிற்

பகரக் சொடிக்கட்டினேன்

சீதஞ் செயுந்தொங்கன் மார்-
பிணு னியலிசை

தெரிந்த திரிமலைராயன்முன்

சீறியே வாதுகவி பாடுதற்
கெதிர்வரு

திருட்டுக் கவிப்புலவரைக்

காதும் பிடித்துக் கவித்துக் கதுப்
பிற்

கரத்திட் டிடித்து முதுகிற்

கலனைவைத் தேமுகக் கடிவாள
மிட்டேறு

கவிகாள மேக நானே"

(தொடரும்)

தமிழறிஞர் மு. இராகவையங்கார் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழர் ஆந்திரர் உறவு பற்றியும், அவர்தம் மொழிகள் பற்றியும் ஆற்றிய பேச்சின் 5-ம் பகுதி இங்கு தரப்படுகிறது. திராவிட நாடு எங்கிருக்கிறது, என்று ஏதும் தெரியாதவர்போல் கேட்போர் படித்துத் தெளியவும், கழகத்தோழர்கள் பயன் பெறவும் இந்த ஆராய்ச்சிக் கட்டுரைத்தொடர் பயன்படும்.

2-ம பக்கத் தொடர்ச்சி

ளுக்கே 'ஒழிக' கோஷம் போடுவதும் சாதாரணம் தான்.

மஞ்சுபரம்பரை காலத்தில், 'வாழ்க' கோஷத்தின் நாயகனுன சியாங், இன்று ஒழிக கோஷத்துக்குள்ளாகி இருப்பது கண்கூடு.

'வாழ்க' கோஷம் போட்டு அரியணையேற்றிய கியூபாவின் பாடிஸ்டாவை, ஒழிக கோஷம் போட்டு ஓடத்துரத்தியதும் உண்மை!

'மன்னர் பிரான் நீடுழி வாழ்க' என்ற பல்லவியுடன் ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் மாநாடுகளின் தன்மைமாறி, ஆங்கில ஏகாபத்தியம் ஒழிக எனச் சொன்னதும் நேருக்குநேர் பார்த்தவைதான்.

ஆகவே, விடுதலைப் பயணத்தின் 'ஒழிக' 'வாழ்க' கோஷங்கள் மாறுவது இயற்கை.

நேற்றுவரை பேரறிவு படைத்த பெரியோருகத் தெரிந்தவர்களை, இன்றைக்கு ஏதும் தெரியாத 'அப்பாவி'யாக உருவகப்படுத்தும் தனி மனித உள்ளப் பண்பாட்டைக் காட்டிலும், தனது பயணத்திற்குத் தடைக் கல்லாக நிற்கத் துணிந்த மீர்ஜாபர்களை, வெங்கண்ணுக்களை குவிஸ்லிங்குகளை ஒழிக எனச் சொல்வதில் விடுதலைச் சக்திகள் வெட்கப்பட வேண்டியதில்லை.

உண்மைதான். ஆனுல், இதுதான் நமது விடுதலைப் பயணத்தின் 'வேத கீதமாக' ஆகிவிட்டிருப்பதாக அந்தச் சிலர் சொல்லித்திரிகின்றனர்.

விடுதலைச் சக்திகளுக்குரிய ஆரம்ப—கோஷமே அதுவாகத் தான் இருக்க முடியும்.

'வாழ்க' என மனித குலம் விரும்புவது வாழும். 'ஒழிக' வென வெறுப்பது நிச்சயம் வீழும். விடுதலைத்தேவன் தீர்மானமான குரலில் பேசினுன்.

'வாழ்க, 'ஒழிக' என்றகோஷங்களுக்கு மேல் எங்கள் சிந்தனை வளரவில்லை எனவும் அந்தக் கூட்டம், குற்றப்பத்திரிகை வாசிக்கிறதே''

வாசிக்கட்டும், வாசிக்கட்டும்; அணுவார்ந்தசிந்தனைகளை வளர்த்துக் கொண்டவர்கள், ஒரு விடுதலை இயக்கத்திற்கும், அரசியல் இலாப வேட்டை ஆடத்துடிக்கும் துடிப்புக்கும் வேறுபாடு இருக்கிறதென்பதை உணர்ந்தே இருக்கின்றனர்.

விடுதலைத் தேவன் நிதானமாகப் பேசினுன்.

"உண்மைதான்! விடுதலை இயக்கம் வெற்றிகாண பல தலைமுறை ஆனுலும் ஆகும் என்ற நினைப்பிலே, நமது தலைமுறை, அவர்கள் கூவித்திரிவது போல், கோஷம் போடுவதில் கழிப்பதையே தான் நாம் இப்போது செய்து வருகிறோமா?'' ஆற்றில் ஒரு காலையும் சேற்றில் ஒரு காலையும் அகல வைத்துக் கொண்டு திணறும் சந்தேகப் பிராணி இப்படி மடக்கினுர்.

"விடுதலை இயக்கம் கோஷம் போடுவதில் தான் காலத்தைப் போக்கும்''

எனப் பேசப்படுகிறதல்லவா?

'ஆம்!'

துரிதமான அரசியல் விடுதலையடைய வெட்டிக் கொண்டு ஓடிய கூட்டம் துடிதுடிப்பதாகக் காட்டிக் கொள்கிறது இல்லையா?

'ஆம்!'

"அவர்களுக்கு ஏதாவதொரு கோஷம் எழுப்பியே மக்களை தாங்கள் பக்கம் கவனத்தை செலுத்த வைக்க நினைக்கிருர்களல்லவா?

'ஆம்!'

"அவர்கள் போடும் கோஷம் என்ன?''

'தமிழ்நாடு தமிழருக்கே'

"மெத்தச்சரி விடுதலை இயக்கம் இந்தப் பனிரெண்டு ஆண்டுகளாகப் போட்டு வந்த கோஷம் என்ன?''

'திராவிடநாடு திராவிடருக்கே' இரண்டுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன?

அவர்கள் போடும் கோஷம் விரைவில் நிறைவேறக் கூடியதாகும், விடுதலைஇயக்கம் போடும் கோஷம் கனவுலகக் காட்சியாகவே முடியுமென்றும் சொல்லப் படுகிறது!

"பைத்யக்காரர்கள் 1948 ஆம் ஆண்டு அக்டோபர் 23- க்குப் பிறகும் தங்களை மறந்து கிடக்கும் நிலையை மாற்றிக் கொள்ளப்பக்குவப்படாத பதர்கள்!''

*

வீசும் அனல் காற்றைக் காட்டிலும் அதிகச் சூடானதாக விடுதலைத்தேவனின் வார்த்தைகள் தெறித்தன.

*

தமிழ்நாடு தமிழருக்காகக் கூடாது என்பது விடுதலை இயக்கத்தின் குறிக்கோள் என அந்தப் பதர்கள்சொல்லமுடியுமா 'இல்லை என்ருலும் மற்ற மூவரும் ஒருசேர வடவரிடத்திலிருந்துபிரிவதில்ஆர்வம் காட்டக்காணும். அதனுல் தமிழ்நாடு மட்டும் தனியாகப் பிரிவது சாத்தியம் என்று சொல்கின்றனர்.

ஏய்க்கிருர்கள். கடந்த பனிரெண்டு ஆண்டு காலமாக மக்களை ஏமாற்றியதாக அவர்கள் மன்னிப்புக் கேட்டுப் பசப்புகிருர்கள். என்ருலும், இப்போதுதான் தமிழர்களை உண்மையில் ஏய்க்க அவர்கள் புறப்பட்டிருக்கிருர்கள்.

"புரிய வில்லையே.''

"சரி! புரியும் படியாகவே பேசுவோம்''

டெல்லியின் கொடுங்கோன்மை ஆட்சியிலிருந்து தென்னகம் முழுவதையும் காட்டிலும் தமிழகம்மட்டிலும் விரைவாகவிடுதலையடையும் என்பது அவர்கள் ஏமாற்றுப் பேச்சல்லவா?

இல்லை. முழு விடுதலையல்ல. நினைத்தபோது விடுதலையடைய ஓர் ஏற்பாட்டுடன் இந்திய யூனியனின் அங்கமாகவே தன்னுட்சி புரிவதுதான் அவர்கள் தற்போதைய குறிக்கோளாம்.

அறவே பிரியாமல், அதே நேரத்தில் அந்த உரிமைக்கான உத்தரவாதத்துடன் தன்னுட்சி இனிமேல்தான் அவர்கள் கேட்டுத்தான் இந்தத் தமிழகம் பெற வேண்டுமா?

ஏன் அவர்கள் முயற்சி இல்லாமலே-அல்லது இப்போதே அந்த நிலை இந்தத் தமிழகத்திற்கு இருக்கிறதா?

"நிச்சயமாக இருக்கவே செய்கிறது! இப்போது தமிழகம் தமிழரால் தேர்ந்தெடுக்கப்படும் தமிழரால்தான் ஆளப்படுகிறது.''

தமிழர்களால்ஆளப்படுவதைக் கொண்டே தன்னுட்சி நடக்கிறதெனச் சொல்லமுடியுமா?

வேறென்ன? தன்னைச்சேர்ந்த-தன்னுல் அனுமதிக்கப்படும் அரசாங்கம் அமைவதைத்தவிர, தன்னுட்சி என்பதற்கு சரியான பொருளாகுமா?

ஓரளவு இல்லைதான். ஆள்கின்றவர் எதனை—யாருடைய உத்தரவை அடிப்படையாகக்கொண்டு ஆள்கின்றனர் என்பதைப் பொறுத்தும் தன்னுட்சி என்பதற்கு இலக்கணம் உண்டு! ஒப்புக்கொள்கிறேன்.

தற்போது தமிழகத்தை ஆள்கின்ற ஆட்சிபீடத்திற்கு அவசியமான உத்தரவுகளை அவ்வப்போது போட்டுக் கொண்டுவரும் டெல்லிவெறியர்களின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொண்டே, தன்னுட்சிக்காகப் பாடுபடப்போவதாகப் பீத்தித்திரிகிறவர்கள் புத்திபெற வெகுகாலம் ஆகப் போவதில்லை.

மேலாதிக்கத்தை ஒப்புக்கொள்வதாக அவர்கள் இன்னமும் வெளிப்படையாகச் சொல்லவில்லையே!

பிரிந்துபோகும் உரிமையுடன் ஒரு பகுதிக்குத் தன்னுட்சி வேண்டுமென, தன்னைவிட பலமிக்க ஓர் அரசிடம் பேரம் பேசுவதே நிரந்தரமாக அந்தப் பலமிக்க அரசின் மேலாதிக்கத்தை ஒப்புக்கொள்வதாகத் தான் பொருள்.

தவிர, அது போன்றதோர் தற்கொலைக்கு ஒப்பான உரிமையை தன்னுடன் ஒட்டியிருக்கும் பகுதிகளுக்கு சாதாரணச் சூழ்நிலையில்—சட்டதிட்டத்திருத்தத்திலேயே எந்த ஏகாதிபத்தியமும் எப்போதும் அளித்ததில்லை.

ஏன், லெனின் கொடுத்தானே?

கொடுத்தான், கொடுத்தான். எப்போது? பிரிந்து போகும் உரிமைபெற்றிருக்கும் எல்லா பகுதிகளும் ஒரு முகமாகப்பொதுவான கொடுங்கோலனை எதிர்த்துப் போராடினபோது.

ஜார் மன்னனின் கொடுங்கோன்மையை, பைலோ ருஷ்யப் பகுதித் தோழன் உணர்ந்த அதே நேரத்திலேயே ஜார்ஜியக் குடிமகனும், அல்பேனிய விவசாயியும், தாட்ஜிக்குடும்பப் பெண்ணும் உணர்ந்தனர்.

ஜார்ஜியாவை மட்டுமா வெகு விரைவில் ஜார்கொடுங்கோன்மையிலிருந்து விடுவித்துவிடப் போவதாக அங்கு எவனும் லெனினையும் மிஞ்சிக் கொண்டு உளறிக் கொட்டவில்லை''

உள்ளம்களிக்க உல்லாசப் பயணஞ்சென்று ருஷ்ய மண்ணை மிதித்தவனெல்லாம், லெனின் செயல் முறைகளுக்கும் புதுக் கருத்துச் சொல்லப் புறப்படுவதிருந்து பிரிந்த தோழர்கள் விதிவிலக்காகவில்லை. ருஷ்ய அரசியல் சட்டத்தைப் படித்து விட்டே, ஒரு விடுதலை இயக்கத்தின் சட்டதிட்டங்களை வரையறுக்கத் துணிந்த அப்பாவித் தனமான அறிவாற்றலில்லாத பேர்வழிகள் அவர்கள்.

விடுதலைத் தேவனே திணறித் திக்குமுக்காடும்வகையில்பேரறிவு பெற்றதாக, அவனுக்கு எதிர் நின்ற கூட்டம் இப்படி கேள்விகளையும் பதில்களையும் கடகட வெனப் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தது.

அடுத்து விளக்கப் போகும் விவரத்திற்காக விடுதலைத்தேவன் அமைதியாக அவைகளைக் கேட்டுக் கொண்டிருந்தான்!

[தொடரும்]

நாணயம்!

"சம்பத்து பேசியிருக்கிருரே, சேலத்தில் பார்த்தாயா? கடந்த பொதுத் தேர்தல் அறிக்கையின் போது, நான் வேண்டுமென்றே திராவிட நாட்டுப் பிரச்னைபற்றி அதில் எழுதாமல் விட்டேன், என்று.''

"பார்த்தேன்! தனக்கு இப்போது திடீரென 'ஞானோதயம்' ஏற்படவில்லை, நீண்டகாலமாகவே இந்த எண்ணமிருந்தது என்பதை வலியுறுத்த இப்படிப் பேசியிருக்கிருர்''

"ஆமாம்! திராவிடநாட்டின் மீது நம்பிக்கையில்லாதவர் தன் கருத்தை ஏன், உடனடியாக எடுத்துச் சொல்லி வெளியேருமல், இத்தனை நாளும் ஒவ்வொரு கூட்டங்களிலும் 'திராவிடநாடு அடைய முடியும்' என்று வலியுறுத்திப் பேசி வந்தார். என்ன காரணம், அதற்கு?''

"என்ன காரணமா! அப்போது இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தி கையில் கழகப்பணம் முப்பதினுயிரம் ரூபாய்கள் வரவில்லை, பார். அதைப்போல, இன்னும் சில வசதிகள் வரட்டும் என்று காத்திருந்தார் போலிருக்கிறது!!''

"என்ன அக்கிரமம்! அரசியலில் இப்படிப்பட்ட ஆளா நாணயம் நேர்மையைப் பற்றிப் பேசுகிருர்!!''

கேள்வி பதில்

கே: தன் அலுவலகத்தின் மீது செருப்பு வீசியதாகத் தினத்தந்தியில் கவிஞர் கண்ணதாசன் கொடுத்துள்ள அறிக்கையில், "ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் அவர்கள்(அதாவதுநாம்) தங்கள் நிலையை ஆராய்ந்து வரட்டும். என்னையும் கவனித்து வரட்டும். வரும் பொதுத் தேர்தலில் பதில் சொல்லட்டும்" என்று குறிப்பிட்டுள்ளாரே, இதன் பொருள் என்ன?

சாரங்கபாணி
திருமஞ்சனவீதி
குடந்தை.

ப: "பொருளை"ப் பற்றி எப்போதுமே கண்ணதாசன் கவலைபடமாட்டார்! கவிஞர்கள் எப்போதும் உணர்ச்சியிலும் கற்பனையிலும் வாழ்கிறவர்களல்லவா? உணர்ச்சி அதிகமாகிற நேரத்தில், மலையும் கடுகாகத் தெரியும் அவருக்கு! அது, அவர், சுபாவம். ஆனால், "வரும் பொதுத் தேர்தலில் பதில் சொல்லட்டும்," என்று எச்சரிக்கிறாரே, அந்த இடம் தான் என்னை யோசிக்கவைக்கிறது. இரகசியத்தை மனதுக்குள் புதைக்கும் சுபாவம், கண்ணதாசனுக்கு வராது. வரும் தேர்தலில் நம்மை எதிர்க்கக் காமராஜர் உண்டாக்கிடும் புதுநிலையே புதுக்கட்சி என்கிற வதந்தியில் உண்மையிருக்கும் போலிருக்கிறது! காங்கிரஸ் தியாகத்தைப் பற்றி பாராட்டிக் கண்ணதாசன் எழுதியிருக்கிறார்!! நெருப்பில்லாமல் புகையாது. சம்பத்மூலம், ஏதோ 'சதி' நடக்கிறது போலும், தேர்தலில் நம்மை எதிர்க்க. சதியோ சாம்பிராணியோ, உங்களைப் போன்ற தோழர்களின் உள்ளன்பு இருக்கும் போது, தி. மு. க. வுக்கு என்ன கவலை!!

*

கே: "வருகிற பொதுத்தேர்தலில் தி. மு. க,வுக்கு சட்டசபையில் 15 இடம் கூடக்கிடைக்காது என்று காமராசர் சொல்வது உண்மையாக ஆகும்" என்று ம. பொ. சி.பேசினாராமே ஒரு ஊரில்? நிலைமை அதுவா அண்ணா!!

தூயமணி
புலியூர்.

ப: அதே பொதுக் கூட்டத்தில் சம்பத் மிகவும் நல்லவர்—பண்புள்ளவர்— நேர்மையானவர்—மற்றவர் தலையைத்தடவிப் பிழைக்கத தெரியாதவர்," என்று ம. பொ. சி. பேசியதாகவும் பத்திரிகையில் பார்த்தேன். காங்கிரசை விட்டு வரும் போது ம.பொ.சி. எந்த நிதியையும் கையாட வில்லை. கழக நிதிக்கு விபரம் சொல்லாமலே (ஒரு வேளை தூத்துக்குடிப் பொதுக்குழு கேட்பதற்கு முன்னாலேயே போய்விடலாம் என்று கருதியதாலோ, என்னவோ) போய்விட்ட ஒருவரை இப்படியெல்லாம் ம. பொ. சி. பேசுவது, பூர்ஷவாக்களைக்கண்டால் மயக்கத்தோடு பல்லிளிக்கும் சில அரசியல் ஏழைகளின் கவனத்தையே எனக்கு உண்டாக்குகிறது !!

*

கே: அண்ணலே! கருணாநிதி எங்கே நின்றாலும், சென்னையில் நான் போட்டியிடுவேன் என்று கண்ணதாசன் எழுதியிருக்கிறாரே?

குப்புசாமி
மாங்குடி.

ப: "சென்னையில்" என்று எழுதியிருப்பதிலேயே, அவர், ஒரு தோல்வியை ஒப்புக்கொள்கிறார்—அதாவது வெளியூரில் போய் என்னால் போட்டியிட முடியாதென்று! அப்படியே 'சென்னையில்' கவிஞர் கண்ணதாசன் நிற்பாராயென்றால், நிச்சயம் நிற்கமாட்டார். ஏனெனில் தேர்தல் வருகிறவரையில் அவருக்கு இந்த ஞாபகம் இருக்காது! அவரைக் 'கவிஞர்' என்ற நிலையிலேயே வைத்து விடுங்கள்—கவிஞர்களே எப்போதும் கற்பனைப்பிரியர்கள்! ஏதாவது, கற்பனை செய்து, அதைச் சொல்லி மகிழ்வதில் தனி இன்பம் காண்பார்கள்!!

*

கே: ஏனண்ணா! கழகத்தார் ஏதோ எப்பொழுது பார்த்தாலும், செருப்பாலடிக்கப் போவதாகவும், காரித்துப்புவதாகவும் வன்செயலில் ஈடுபடுவதாகவும், 'தென்றல்' எழுதிக் கொண்டே வருகிறதே?

சிதம்பரம்
கோட்டையூர்.

ப: தோழரே! 'தென்றல்' ஆசிரியர் கவிஞர் கண்ணதாசன், கடந்த ஆண்டு புரட்சி இளைஞர் சங்கம் ஒன்று ஆரம்பித்து, அதில்பலரைச் சேர்த்து, காங்கிரசுக்காரர்கள் அடித்தால் திருப்பியடிப்பேன்—உதைத்தால் உதைப்பேன்— குத்தினால் குத்துவேன என்று பல ஊர்களின் பேசி அற்காக சில தோழர்களையும் சேர்த்ததையும் கடைசி நேரத்தில் அண்ணா, அம்முயற்சியைத் தடுத்ததும் உங்கட்குத் தெரியுமா? அப்படிப்பட்ட கவிஞர், இன்று 'வன்செயல்' கூடாதென்பது, எனக்கு விந்தையாகப் பட்டாலும், அவர் போன்றவர் எழுதாத அளவுக்கு நாம் கண்ணியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பேன்! தி. மு. க வளர்ந்ததே, எதிரிகள் கண்டபடி பேசியதாலும், கண்ணியமற்ற முறையில்லாமல் நம்மைத்தாக்கியதாலும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதனாலேயே திருச்சி இருதயராஜ் சம்பவம் நடந்ததும், நாம் எல்லாம் துடித்தோம். யாராவது இப்படிப்பட்ட செயலில் கழகத் தோழர்கள் ஈடுபடுவார்களேயானால் நாமே அத்தோழரைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைக்கவேண்டும். நமக்கு வேண்டாம் அநாகரீகமான அரசியல்! லோகியா மீது கல் எடுத்து அடிக்கச் சொன்ன சம்பத்துக்கே அந்த அரசியலை விட்டு விடுவோம்!! நம்மோடு இருந்தவர்கள், இப்படிப் பேசுகிறார்களே, எழுதுகிறார்களே என்று எண்ணும்போது, கோபம் வரும்அக்கோபத்தை அடக்கிக் கொள்ளும் போதுதான், நாம் மகாத்மா ஆகிறோம்! எதிரி, சாமான்யன் ஆகிறான்!!

*

கே: எம். ஜி. ஆர். பம்பாயிலிருந்து திரும்பியதும், தி. மு. கவில்தான் அதிகப்பங்கேற்கப் போவதில்லையென்றும், நடிகர்கள் நேரடியாகப்பங்கு கொள்ளாமலே தி. மு. க வளரும் என்கிற நம்பிக்கை உண்டென்றும் பத்திரிகையாளர்களிடம் சொன்னாராமே. உண்மையா?

சங்கரன்
உதயமார்த்தாண்டபுரம்

ப: உண்மைதான்! எம். ஜி ஆரின் புத்திகூர்மையையும், பெருநோக்கையும், தன் ஆசைகளைவிட்டுக் கொடுத்தாவது கழகத்தின் மீதுவரும் மாசு துடைக்கப்பட வேண்டுமெனும் பேரார் வத்தையும் நான் மதிக்கிறேன். இப்படிப்பட்டவர்களே, ஒரு கழகத்தின் நல்வாழ்வை, மனமார நினைப்பவர்கள். சிறந்த அரசியல் வாதிகள்.

வருந்துகிறோம்

நண்பர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ. அவர்களின் ஏழுமாத ஆண் குழந்தை 11. 5. 61 அன்று திடீரென இறந்த செய்தி கேட்டு மிகமிக வருந்துகிறோம். சகோதரர் சண்முகம் இக்குழந்தையின் பால் மிகுதியான அன்பு கொண்டிருந்தார். ஆகவே, நமது ஆறுதல் அவரது துயரத்தை நீக்காது எனினும், இயற்கையின் வழிக்கு நாம் என்ன செய்யஇயலும் என்றெண்ணி மனவமைதி பெறுமாறு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.



பத்மினியின் திருமணத்தை முன்னிட்டு, "செந்தாமரை" படப்பிடிப்பு இந்தக் கிழமை, இரவு பகலாகப் பரணி ஸ்டுடியோவில் நடக்கிறது. அரங்கண்ணல் கதை வசனம் எழுதி, டைரக்டர் ஏ பீம்சிங் டைரக்ட் செய்து வரும் இச்சீர்திருத்த ஓவியத்தில் கே. ஆர். ஆர்., சிவாஜி, எஸ். எஸ். ஆர். பந்துலு, சந்திரபாபு, தங்கவேலு, ராமராவ், எம் என். கிருஷ்ணன் முதலிய தென்னகத்திரை நட்சத்திரங்களும் லலிதா, பத்மினி ராகினி சகோதரியரும் பங்கேற்றுள்ளனர். இசை விசுவநாதன் ராமமூர்த்தி. ஜூலை முதல் வாரத்தில் மலரப்போகும் இப்படத்தில், சீர்திருத்த வக்கீலாக வரும் நமது கே. ஆர். ஆர்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6